தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

துணர் : 62 மலர் : 2

உள்ளுறை **பக்கம்**

1. 'தமிழ் காவல் சில ஆய்வுரைகள்' — ஒரு விதூஷக மதிப்புரை 49
2. வானில் பறந்த வாழவந்திப் புலவன் 55
3. பாரதி பார்வையில் பரவல் செய்தித் தொடர்பு 58
4. சிதறிய சிலம்பு ... 75
5. கதையாசிரியர்களும் உத்திகளும் ... 77
6. கஜபாகுவின் கால அடிப்படையில் சங்க காலம் : கால ஆராய்ச்சி — ஒரு மறு ஆய்வு. 85

ஆசிரியர் குழு

திரு. ச. இராமநாதன்.
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்

சிலம்பொலி சு. செல்லப்பன், எம். ஏ., பி. டி., பி. எல்., பிஎச். டி.,
இயக்குநர், தமிழ்வளர்ச்சித் துறை சென்னை.

டாக்டர் தமிழண்ணல், எம். ஏ., பிஎச். டி.,
தலைவர், தமிழ்த்துறை, மதுரைக்காமராசர் பல்கலைக்கழகம்.

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,
தலைவர், தமிழ் மொழித்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

பேராசிரியர் பி. விருத்தாசலம், எம். ஏ.,
முதல்வர், தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தைக் கலைக்கல்லூரி

பேராசிரியர் சி. கோவிந்தராசன்,
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.

புலவர் ஆ. பாலன், எம். ஏ., எம். ஃபில்.,
துணை முதல்வர், தமிழவேள் உமாமகேசுவரனார்
கரந்தைக் கலைக் கல்லூரி,

புலவர் மீனா. இராமதாசு, எம். ஏ.,
தலைமைத் தமிழாசிரியர், உமாமகேசுவரா மேனிலைப்பள்ளி

திரு. பா. மதிவாணன், எம். ஏ., எம். ஃபில்.,
துணைப்பேராசிரியர், தமிழவேள் உமாமகேசுவரனார்
கரந்தைக் கலைக் கல்லூரி.

பதிப்பாசிரியர் : பேராசிரியர் ச. பாலசுந்தரம்

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு — 2019

துணர் : 62 விபவ — வைகாசி மலர் : 2

மே — ஜூன் — 1988

'தமிழ் நாவல் ஒரு சில ஆய்வுகள் — ஒரு விதூஷக மதிப்புரை

[எஸ் தோதாத்திரி, M. A., தமிழ் நாவல் சில ஆய்வுகள், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை முதற்பதிப்பு, பிப்ரவரி, 1988 விலை ரூ. 13.00]

பா. மதிவாணன்,
367 மேலவீதி,
தஞ்சாவூர்-9.

என்னுடைய பேராசிரியர் டாக்டர் இரா. சண்முகவேலன் அவர்களோடு பேருந்தில் வந்து கொண்டிருந்தபோது, நேரத்தைக் கழிக்க அவரிடமிருந்து 'தமிழ் நாவல் சில ஆய்வுகள்'

என்னும் நூலை வாங்கிப் படித்தேன். இந்நூலை நான் தேடிப் படிக்கவுமில்லை இது மதிப்புரைக்காக அனுப்பப்படவுமில்லை. எனினும் இந்நூல் பற்றிய ஒரு 'விதூஷக மதிப்புரை' எழுத என்னைத் தூண்டியது,

> தமிழ்ப் பண்டிதர்கள் இலக்கியத்திற்கு ஒரு இலக்கு உண்டு என்று கூறுகிறார்கள். அவர்கள் இலக்கு என்று குறிப்பிடுவது, எது என்று அவர்களைக் கேட்டால் 'இலக்கு-இயம்' இலக்கியம் அதாவது இலக்கை நோக்கி முன்னேறுவது இலக்கியம் என்ற விதூஷக பதில் அவர்களிடமிருந்து கிடைக்கும்.

என்கிற அந்நூலின் பகுதிதான் (ப. 127)

'ராஜம் கிருஷ்ணனின் இலக்கிய முறை இயலும் அலைவாய்க் கரையும்' என்கிற கட்டுரையின் உள்ளடக்கத்திற்கு மேற்குறித்த தொடக்கப் பகுதி பொருத்தமற்றதாகும்.

தமிழ்ப் பண்டிதர்களிடம் கிடைக்கும் பதில் என்று திருவாளர் எஸ். தோதாத்ரி, M. A., அவர்கள் குறிப்பிடுவதில் 'விதூஷகம்' எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை

1988 இல் வெளியாகும் ஒரு நூலில், அதுவும் நவீன இலக்கியம் பற்றிய கட்டுரையில், தமிழ் பண்டிதர்களை இழுத்து வைத்துக் கிண்டல் செய்திருப்பது-இந்நூலாசிரியர் பாணி-யிலேயே 'இச' முத்திரை குத்துவதனால்--டான் குவிக் சாடிசம் தான்.

தமிழ்ப் பண்டிதர்கள் மட்டுமின்றி எவருமே விமரிசனத்திற்கு அப்பாற்பட்டவரென்று நான் கூறவில்லை, எனினும் விமரிசிப்பவருக்குக் குறைந்தபட்சத் தகுதியேனும் வேண்டாமா ?

தமிழ்ப் பண்டிதர்கள் தமக்குரிய தளத்திலேனும் தெளிவுடையோர். நான் தமிழ்ப்பண்டிதனல்லன். ஆனால் அவர்களோடு தொடர்புடையவன். அத்தொடர்பால் பயன் பெற்றவன். எனவே இந்த மதிப்புரையை எழுதியுள்ளேன்.

எழுத்துப் பிழை :-

"தற்கால தமிழ் இலக்கியத்தில்"... என முன்னுரையின் தொடக்கத்திலேயே (ப V) வல்லொற்று மிக வேண்டிய இடத்தில் விடுபட்டுள்ளது. இத்தகைய ஒற்றுப் பிழைகளுக்குத் தனிப் பட்டியலே தரலாம். சான்றுக்கு ஒன்று காட்டியுள்ளேன்,

சொற் குழப்பம் :-

நூலின் முன்னுரையில் (ப. vi) 'முயன்றுள்ளேன்', 'முயற்சித்துள்ளேன்' எனும் இரு வடிவங்கள் பயன் படுத்தப்பட்டுள்ளன. முன்னது சரியானது. பின்னது தவறானது. நூலாசிரியர் இரண்டையும் பயன்படுத்துவதால் அவரது தெளிவின்மை தெளிவாகிறது.

தொடர்ப்பிழை :-

''இதன் விளைவானது தனி நபர்களை இன்னும் அதிகமாகப் பிளவுண்டவர்களாகவும், அவர்கள் செயல்களின் காரணங்களைப் புரியாதவர்களாகவும் மாறியுள்ளனர்'' (ப, 14) இதிலுள்ள பிழையைச் சராசரித் தமிழறிவுள்ள எவரும் தெரிந்து கொள்ளலாம்.

நூற்பெயர்ப் பிழை :-

ஓர் ஆய்வு நூலெனில், பிற நூல்களின் பெயர் முதலிய வற்றைத் தவறின்றிச் சுட்டவேண்டும். இந்நூலின் முன்னுரையில் (ப. vii) 'தமிழ் நாவலும் யதார்த்த வாதமும்-கிரியா' என ஒரு நூல் குறிப்பிடப்பகிறது. இது தவறாகும். 'எதார்த்த வாதமும் தமிழ் நாவல்களும் காவ்யா' என்பதே சரியானது.

ஆட் பெயர்ப் பிழை:-

நூலின் முதற் கட்டுரையின் முதற்பக்கத்தில், ''இந்தப் பெருமளவிற்கு விற்பனையான நாவலாசிரியர்களாக ஆரணி குப்புசாமி முதலியார், ஜே. ஆர் ரங்கராஜு, வை. மு. கோதை நாயகி அம்மாள், சங்கர்லால், சுஜாதா போன்றவர்களைக் குறிப்பிடலாம்.'' (ப 1) என உள்ளது. சங்கர்லால் நாவலாசிரியரல்லர்; ஒரு கதைமாந்தர்.

திறனாய்வாளர் க நா. சு. அவர்கள் இந்நூலின் ஒரு பக்கம் முழுதும் (ப. 19) கா. நா. சு. என்றே பிழையாகக் குறிப்பிடப் பெற்றுள்ளார்.

அடிக் குறிப்புக் குழப்பம் :-

ஆய்வுக் கட்டுரைகளின் அடிக்குறிப்புகள் தெளிவின் பொருட்டு இடம் பெறுவன. ஆனால் இந்நூலின் முதல் அடிக் குறிப்பே மயக்கம் தருகிறது.

"இத்தகைய துப்பறியும் நவீனங்கள், திகில் கதைகள் பற்றிய ஆய்வு இன்று மிகக் குறைவாகவே உள்ளது." என்கிற கட்டுரைப் பகுதிக்கு அடிக்குறிப்பாக, "இக் கட்டுரை வெளியான பின்னர் மதுரைப் பல்கலைக் கழகத்தில் ஒப்பியல் இலக்கிய ஆய்விற்காக ஆங்கிலத்தில் டாக்டர் பட்டத்திற்கு ஒரு ஆய்வு நூலாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது" (ப.2) எனத்தரப்பட்டுள்ளது. இக் குறிப்பின் மூலம் என் சிற்றறிவுக்கு எதுவும் எட்டவில்லை.

மேற்கோள் பகுதிப்பிழை :-

பிற நூல்களிலிருந்து மேற்கோள் காட்டும்போது அம்மேற் கோளை எவ்வித மாற்றமுமின்றித் தரவேண்டும். ஆனால் இந்நூலில் அந்நெறி கடைப்பிடிக்கப் பட்டதாகத் தெரியவில்லை. அதிலும் மேற்கோள் குறிகளுக்குள் ஒரு பகுதி தரப்பட்டிருக்கு மானால் அது முழுவதும் மூல நூலில் உள்ளவாறே தரப்பட்டுள்ள தென்று பொருள். மாறாக, ஜே. ஜே. சில குறிப்புகள்' என்கிற நாவலிலிருந்து தவறுகளும், விடுபாடுகளுமாய் ஒரு பகுதி மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. (ப. 122) நூலாசிரியர் உள் நோக்கத்தோடு இத்தவறு செய்யவில்லை யெனினும், இம்மேற் கோள் பிழை படிப்போரைத் தடுமாறச் செய்கிறது. ஏனெனில், மேற்கோள் பகுதியைத் தொடர்ந்து "ஒன்றிற் கொன்று தொடர் பில்லாத இந்தப் படிமம் சர்ரியலிச வகையைச் சார்ந்தது" (ப. 123) என்று நூலாசிரியர் கொண்ட தவறான முடிவைப் படிப்பவரும்-மேற்கோள் பகுதிப் பிழை காரணமாக ஏற்கநேரும். மூலநூலைப் படித்த ஆசிரியர் அதனைப் புரிந்துகொள்ளாமல் தவறான முடிவுக்கு வந்துள்ளார்.

புரிந்து கொள்ளாமை :-

ஜே. ஜே. சில குறிப்புகள் 'நாவலிலிருந்து மேற்கோள் காட்டுப்பட்டுள்ள அப்பகுதி-பிழையின்றி-இங்குத் தரப்படுகிறது.

> முல்லைக்கல், உன் எழுத்தை நான் மனத்தால் வெறுக்கிறேன். மாட்டுக்குச் சொறிந்து கொடு அது நல்ல காரியம். ஆனால் மனிதனுக்கு ஒரு போதும் சொறிந்து கொடுக்காதே. சக மனிதனை ஏமாற்றாதே. உண்மையை உன் தடித்தனம் கசக்கி வருந்தச் செய்வதல்ல மனிதாபிமானம். லூக்கோஸின் மகள் ஏலியாம்மாவின் (அவளை நான் எலிக்குட்டி என்று அழைக்கவே விரும்புகிறேன்) வீணை வாசிப்பை நான் கேட்கச் சென்றிருந்தபோது, அவளுடைய தனி அறையில், வீணையின் கம்பிகளு

> அதிர்ந்தன. எலிக்குட்டியோ எங்களுடன் இருந்தாள். நாங்கள் வேகமாக ஓடிக் கதவைத் திறந்து பார்த்த போது, கம்பிகள் தானாக அதிர்ந்து கொண்டிருந்தன. மேல் மாடி உத்திரத்தில் ஒரு தச்சன் ஆப்பை மரச் சுத்தியலால் அறைந்து கொண்டிருந்தான். இது தான் மனிதாபிமானம். எருமைகளுக்கோ கம்பிகள் இல்லை அதிர (சுந்தர ராமசாமி, ஜே. ஜே. சில குறிப்புகள், க்ரியா, முதல் பதிப்பு, நவம்பர், 1981, பக். 81-82)

இப்பகுதியைக் காட்டி 'ஒன்றுக்கு கொன்று தொடர்பில்லாத படிமம்' என்று கூறி 'இச' முத்திரையும் குத்தியுள்ளார் திருவாளர் எஸ். தோத்திரி. M. A அவர்கள். மனிதாபிமானம் பற்றிய ஓர் உருவக விளக்கமே மேலுள்ள பகுதி. இதனை விளங்கிக் கொள்ள ஆய்வாளர் முயலாமைக்குக் காரணம் இவரது அணுகு முறைக் குறைபாடேயாகும்.

அணுகு முறைக் குறைபாடு :

நூலில் ராஜம் கிருஷ்ணன் பற்றி ஆராயும்போது, "அவர் பொன்னீலனைப் போன்று ஓர் இயக்கத்தைச் சார்ந்தவரல்லர். அதனுடைய குறைபாடுகளும் அவரிடம் காணப்படுகின்றன" (ப.46) என்றும், "ராஜம் கிருஷ்ணன் போன்றவர்கள் உழைக்கும் வர்க்கத்தைப் பற்றி எழுதினால், இயக்கத்தைச் சார்ந்தவராக இல்லாமையினால், அவர்களது மனப் படிவங்கள் மிகையாகவே நாவலில் வெளிப் படுகின்றன." (ப. 55) என்றும் குறிப்பிட்டுள்ளார்.

நாவலியக்கியத்தை ஓர் இயக்க-குறிப்பாகச் சொல்வதனால் ஓர் அரசியல் கட்சி - இயந்திரத்தின் பல் சக்கரத்தில் ஒரு பல்லாகவே பார்க்கிறார். இத்தகைய வறட்டுத்தனமும் இதற்கேற்றதொரு சூத்திரவாத அணுகுமுறையும், எந்தப் படைப்பையும் சூத்திரங்களுக்குள் அடைத்துக் காணத் தூண்டு கின்றன. இதனால் படைப்புகளை முழுமையாகப் புரிந்து கொள்ளாமலேயே 'ஆராய' நேர்வது தவிர்க்க முடியாததாகும்.

சுயவிமரிசனத் தேவை :

இந்நூலாசிரியர் தம்மை ஒரு 'மார்க்சிச விமர்சகர்' (ப VIII) என அடையாளம் காட்டிக் கொள்கிறார். அதிலும் ஓர் இயக்கம்-அஃதாவது கட்சி-சார்ந்து, அதன் வெளியீட்டு வசதிகள், வாசகர்களைக் கொண்ட விமரிசகர் இவர். இவை காரண மாகவே எவரையும் எப்படியும் கேலி செய்யும் துணிவைப்

பெற்றார் போலும், அவ்வாறெனில் அவருக்குச் சிலவற்றை நினைவூட்ட வேண்டும்.

> கம்யூனிஸ்டுகள் கலை இலக்கியத் துறையை அலட்சியப் படுத்த வில்லை ... தமிழ் நாட்டில் கொஞ்சம் பலஹீனமாக இருந்த போதிலும் வெகு சிரத்தையுடன் பாடுபட்டு உறுதியுடன் முன் வந்து கொண்டிருக்கிறோம். (ப ஜீவானந்தம், இலக்கியச் சுவை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், இரண்டாம் பதிப்பு, 1976, ப 33).

என்று ஜீவா சொல்லிக் கால் நூற்றாண்டு கழிந்து விட்டது கலாநிதி க. கைலாசபதி,

> தமிழ் நாட்டில் முற்போக்குவாத விமர்சர்கள் கோட்பாட்டு ரீதியாக அரசியல் குறித்து[ப்] போதிய அளவு இன்னும் ஆராய்ந்து எழுதவில்லை என்றே தோன்றுகிறது. (க. கைலாசபதி, இலக்கியமும் திறனாய்வும், சென்னை புக் ஹவுஸ், மூன்றாம் பதிப்பு, மார்ச், 1981, ப 147)

என்றெழுதிப் பத்தாண்டுகளுக்கு மேலாகி விட்டது.

திருவாளர் எஸ். தோதாத்திரி M A. அவர்களே, ''மார்க்ஸீய நோக்கில் இலக்கியத்தைக் காணும் முறை அதன் ஆரம்ப கட்டத்திலேயே இருக்கிறது.'' [எஸ். தோதாத்ரி, சோஷலிச யதார்த்த வாதத்தின் அடிப்படைகள் [ஓர் அறிமுகம்] நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, முதற்பதிப்பு 1984, ப. 3.] என்றெழுதியுள்ளார்.

கால் நூற்றாண்டுக் காலமாய் மாறி மாறி இந்த அணுகு முறையின் வளராமை பற்றிப் பேசி வருவோர், அம்முறையை வளர்ப்பதிலே பொறுப்போடு, கூடிய ஈடுபாடு கொள்ள வேண்டாமா? தமிழ்ப் பண்டிதர்களைக் கேலி செய்து பயனென்ன?

சமுகவியல் நோக்கில் இலக்கியம் அல்லது இலக்கியத்தின் சமூகவியல் என்பது தமிழைப் பொறுத்தவரை போதிய அளவு வளரவில்லை. இந்நிலையில் இத்துறையில் ஈடுபடுவோர் - பிற துறையாயினும் ஆய்வாளர் எல்லோர் பொறுப்போடும் அடக்கத்தோடும் செயலாற்றுதல் வேண்டும்.

வானில் பறந்த வாழவந்திப் புலவன்

புலவர் செ. இராசு, எம்.ஏ.
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர் - 613 005.

கொங்கு நாட்டில் கிடைத்துள்ள பல்வேறு சமுதாயப் பட்டயங்களில் சென்மப் புலவன் பட்டயம் என்பதும் ஒன்று. சென்மப் புலவன் கொங்கு 24 நாடுகளில் வாழவந்தி நாட்டுக்கு உரியவன். அவ்வாழவந்தி நாட்டுக்குரிய வேட்கோவர்களின் பூசாரியார் சேலம் மாவட்டத்து நாமக்கல்லில் வாழ்ந்து வருகின்றார். அவர் வசம் இச்செப்பேடு உள்ளது.

இச்செப்பேட்டில் சென்மப் புலவன் செய்த செயற்கரிய அருஞ்செயல் ஒன்று கூறப்படுகிறது. அதுவே கி பி, 17 ஆம் நூற்றாண்டில் சென்மப் புலவன் வானில் பறந்த முயற்சியாகும். தமிழர் அறிந்து பெருமை கொள்ளுவதற்குரிய இந்நிகழ்ச்சி இச்செப்பேட்டில் முக்கிய இடம் பெறுகிறது.

சென்மப் புலவன் சித்து வேலைகளில் மிகவும் வல்லவன். அதனால் சென்மப் புலவனுக்குச் செம்மோடி சித்தன் என்ற பட்டம் அளிக்கப்பட்டிருந்தது. வேட்கோவர் இனத்தைச் சேர்ந்த அவருக்கு வாழவந்தி நாட்டில் வாழும் எல்லாங் சமுதாய மக்களிடமும் நல்ல மரியாதையும் மதிப்பும் இருந்தது.

ஒருநாள் வாழவந்தி நாட்டுக்குள் சிதம்பரத்தைச் சேர்ந்த ஊருக்குப் புதிய மோடி வித்தைக்காரன் வந்து ஊர்ச்சாவடியில் தங்கி எல்லோரையும் தன் வித்தைகளைப் பார்க்க வருமாறு அழைத்தான்.

ஆனால் கூடவராயக் கவுண்டர், பொத்திய சேர்வைகாரர் சுவநாத பிள்ளை இன்னும் குடியானவர் கட்டுகல்லை காசா வர்த்தகர் ஆகிய ஊரார் அனைவரும் சிதம்பரம் சித்தனை 'ஆடுரது நிறுத்தும்' என்று தடை செய்தனர். வாழவந்தி நாட்டுக்குள் செம்மோடி சித்தன் சென்மப் புலவன் அனுமதி யில்லாமல் எவரும் வித்தை காட்டக்கூடாது என்றனர்.

பின்னர் சிதம்பரம் சித்தன், சென்மப் புலவன் திருநீலகண்டர் இனத்தைச் சேர்ந்தவர் என்பதை அறிந்து சமையலுக்கு நவபாண்டம் வேண்டும் என்று கேட்டுக் கேலி செய்கின்றனர். இரு விந்தைக்காரர் கட்கும் பலத்த போட்டி நடக்கிறது. போட்டியில் வெற்றிபெற்ற சென்மப் புலவன் வாழவந்தி நாட்டார் அறியப் பல சித்து வேலைகளைச் செய்கின்றான்.

நாவில் ஊசியை நிறுத்தி அவ்வூசியின் மீது கலப்பையை நிறுத்திக் காட்டுகிறான். தன் வித்தைகளின் இறுதியில் அரிய நிகழ்ச்சி ஒன்றைச் செய்து காட்டினான். இரு முறங்களைத் தோள்கள் இரண்டிலும் கட்டிக் கொண்டு வானில் பறந்து காட்டிய நிகழ்ச்சியேயாகும்.

வானில் பறவைபோல் பறந்து காட்டிய செம்மோடி சித்தன் சென்மப் புலவன் இறுதியில் குளம் ஒன்றில் இறங்கினான் பிற்காலத்தில் அக்குளம் சித்தன் குளம் என்றே அழைக்கப் பட்டது. குளத்தின் அருகேயுள்ள பாறையில் இந் நிகழ்ச்சியைக் கல்வெட்டாகவும் பொறித்து வைத்தனர்.

இதனைச் செப்பேட்டு நடையிலேயே காணலாம்.

> 'சுவாமி பறாக்கென்று றண்டு முரம் கொண்டு வற சொல்லி றண்டு தோலுலையும் கட்டி பரவையாக பறந்து பறக்கும் போது தெய்வப் பாழியில் வந்துனின் றான். றாசறாசாக்கள் துறைகள் பார்த்து கீவுண்டர் கள் மனியக்காரர்கள் சந்தோஷப்பட்டு சித்தன் குளமென்று பேறுமிட்டு கல்வெட்டுப் போட்டு நஞ்சயில் பத்து மானிலம் புஞ்சயில் பதனஞ்சி வெள்ளக்காடும் குடுத்து மூலைக்கி மூலை கல்வெட்டுப் போட்டு சகல வெகுமானமும் பண்ணி னாலு வீதியும் ஊர் மெறமனையும் வந்து வாழவந்தி நாட்டுக்கு செம்மோடி சித்தன் சென்மப் புலவன் என்று பேறுமிட்டு திருமலை னாயக்கர் காரிய துரந்தரான முன்னமுடநாதர்க்கும் சீர்பாத மரிய சீதேவியம்மன் அரிய தேவாதி தேவர்கள் அரிய நடப்புவிச்சுப் போட்டுப் போனார்கள்'.

திருமலை நாயக்கர் மதுரையில் கி. பி. 19—2—1623 முதல் 16—2—1659 முடிய அரசாட்சி செய்தவர். இச்செப்பேட்டில் அவர் காலத்துத் தலைவர் இராமசந்திர நாயக்கர் என்பவரும் குறிக்கப்படுகிறார்.

கி. பி. 17 ஆம் நூற்றாண்டில் மனிதர் பறவை போல வானில் பறக்கலாம்; அதற்குப் பிற கருவிகளைப் பயன் படுத்தலாம் என்று கொள்கையளவில் எண்ணத்தை உருவாக்கிச் செயலில் செய்து காட்டினான் புலவனும் சித்தரும் ஆகிய செம்மோடி சித்தன் சென்மப் புலவன். செம்மோடி சித்தன் சென்மப் புலவன் கி. பி. 17 ஆம் நூற்றாண்டில் நிகழ்த்திக்

காட்டிய இந்நிகழ்ச்சி உலக அறிவியல் வரலாற்றில் குறிக்கத் தக்க நிகழ்ச்சியாகும்.

20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தான் இரைட் சகோதரர்கள் வானில் பறக்கும் விமானம் கண்டனர் அதற்கு முன்பு உலகின் பல்வேறு பகுதிகளில் இதற்கான பல முயற்சி களைச் செய்தனர். சென்மப் புலவன் போல் இறக்கை கட்டிக் கொண்டு மலைமீதேறிப் பறந்து படுகாயம் அடைந்தவர் களும் உண்டு.

தமிழகத்தில் 17 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு சித்தன் வானில் பறந்தான் என்று ஒரு செப்பேடு கூறுவது செயற்கரிய ஒரு செயலாகும். தமிழர்கள் பழங்காலத்திலேயே அறிவியல் முன்னோடியாகத் திகழ்ந்தனர் என்ற நிகழ்ச்சிக்குச் சென்மப் புலவன் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

பாரதி பார்வையில் பரவல் செய்தித் தொடர்பு

டாக்டர் கி. கருணாகரன் & வ. ஜெயா.
பாரதியார் பல்கலைக் கழகம்,
கோயமுத்தூர்.

முன்னுரை :-

இன்று பரவல் செய்தித் தொடர்பு சாதனங்களாக சினிமா, வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள், இதழ்கள், சஞ்சிகைகள், விளம்பரங்கள், அறிவிப்புகள், அறிக்கைகள் போன்றவை விளங்குகின்றன. இவை செய்திகளை உடனுக்குடன் மக்களுக்குத் தெரிவிக்கின்றன. உலகின் எந்தவொரு நாட்டில் புதிய நிகழ்ச்சிகள், கண்டுபிடிப்புகள், கொள்கைகள்-கோட்பாடுகள் தோன்றினாலும் இச்சாதனங்களின் மூலம் அவை, மக்களை வந்தடைகின்றன. அத்தகைய முன்னேற்றத்தை இன்றைய அறிவியலுலகம் நமக்குக் கொடுத்திருக்கின்றது. ஆனால் பாரதி வாழ்ந்த காலத்தில் முக்கிய பரவல் செய்தித் தொடர்புச் சாதனமாக விளங்கியவை பத்திரிகைகளே. பத்திரிகைகளின் மூலமாகவே பாரதி மக்களுடன் தனது கருத்துக்களையும் உலக நிகழ்ச்சிகளையும் பகிர்ந்து கொண்டார்; பல்வேறு உணர்வுகளை நாட்டு மக்களிடையே ஆற்றல் மிக்க வகையில் பரப்பலானார். விடுதலை வேட்கை ஒரு புறம்; சமுதாய எழுச்சி மற்றொரு புறம் என்று வகுத்துக்கொண்டு அவற்றிற்கேற்பப் பத்திரிகைகளை (நாளிதழ்கள், வார-மாத இதழ்கள் என) வடிவமைத்து, தாம் சொல்ல வந்த கருத்துக்களை மிக எளிமையாக எடுத்துச் சொல்லலானார். ஆகவே, அவரை ஆசிரியராகக் கொண்டு வெளி வந்த பத்திரிகைகள் மேற்குறிப்பிட்ட சமுதாயப் பணிகளை அக்காலச் சூழலில் நிறைவேற்றும் வகையில் அமைந்திருந்ததைக் காண்கிறோம்.

பரவல் செய்தித் தொடர்பில் மொழிப்பயன்பாடு :

நம் நாட்டில் பரவல் செய்தித் தொடர்பு (Mass Communication) மூலங்களாகப் பத்திரிகைகள், வானொலி, சினிமா, தொலைக்காட்சி போன்றவை செயல்பட்டு, சமுதாயத்திற்குப் பெரிதும் துணை புரிந்து வருகின்றன. இம்மாதிரியான கருத்துப் பரிமாற்றங்களில் மொழியின் முக்கியத்துவம் இன்றியமையாததாகிறது. பெரும்பாலும் அந்தந்த மாநிலங்களில் அவ்வம் மாநில மொழிகளிலும் சிறுபான்மை மொழிகளிலும் தினசரி, வார மாதப்

பத்திரிகைகள் வெளிவருகின்றன. இவற்றுள் சில ஒரு தன்மையதாகவும் மற்றும் சில வேறு தன்மையதாகவும் உள்ளதைக் காண முடிகிறது. முன்பெல்லாம் பிற மொழிக் கலப்பில்லாத மொழிநடையே (Language Style) சிறந்தது என்ற கருத்து பரவலாக நிலவி வந்தது. ஆனால் காலப் போக்கில் எந்த வகையான நடை அம்மொழி பேசும் சமுதாயப் பிரிவினருக்கும் நாட்டு மக்களுக்கும் கருத்துப் பரிமாற்றத்திற்கு எளிதானதாகவும் வலுவானதாகவும் அமைகிறதோ அதனையே பத்திரிகைகளிலும் மற்றும் வேறு பொதுப் பரிமாற்றத் தொடர்பு (Common media) மூலங்களிலும் பயன்படுத்துவது என்பது வழக்கமாகிவிட்டது. பொதுத் தொடர்பு என்பது எளிதான நடையிலும் (Simple style) அதே சமயத்தில் கருத்துப் பரிமாற்றத்தில் ஆற்றல் மிக்க நடையிலும் (Efficient style) இருக்க வேண்டும் என்பதை எந்த சமுதாயமும் விரும்புவது இயல்பே. இந்நிலை பொதுவாக ஒரு மொழியில் (குறிப்பாகப் பயன்பாட்டில்) இருநிலைத் தன்மை (diglossia) ஓங்கியிருக்கும் போது ஏற்படக் கூடியதுதான். எடுத்துக்காட்டாக, தமிழ், சிங்களம், அராபிக் போன்ற மொழிகளைச் சொல்லலாம். இதே மாதிரியான நிலை சோவியத் நாட்டில் வழக்கில் உள்ளது. எழுத்து முறை இல்லாத மொழிகள் கூட வானொலியிலும் தொலைக்காட்சிகளிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. என்பார் டெசரீவ் (1973).

பாரதியின் பத்திரிகை மொழி :

பாரதியார் வாழ்ந்த காலத்தில் பரவல் செய்தித் தொடர்புக்காகப் பத்திரிகைகளே பயன்படுத்தப்பட்டன. ஆகவே, பாரதியார் அக்கருவியினைத் தனக்கு சாதகமாக்கிக் கொண்டார். தான் சொல்லவந்த கருத்து மக்களிடம் சென்று சேர வேண்டுமென்றால் மக்கள் புரிந்து கொள்ளும் மொழியில் எழுதவேண்டும் என்று நன்கு அறிந்து கொண்டார். படித்தவர்கள் மட்டுமே புரிந்து கொள்ளக் கூடிய இலக்கிய நடையைத் தவிர்த்து அனைவரும் புரிந்து கொள்ளக் கூடிய பேச்சு வழக்கு நடையைப் பயன்படுத்தினார். மக்களிடம் காணப்படும் அன்றாட வழக்குச் சொற்கள் அவரின் எழுத்தில் முழுமையடைந்தன. தனது கருத்துக்களையும், உணர்ச்சி களையும் பேச்சு வழக்குச் சொற்கள் மூலம் வெளியிடலானார்.

இதனையே "பாரதியார் வர்த்தமானப் பத்திரிகை நாமாக் உண்டாக்கிய கருவியன்று. பிறரிடமிருந்து கற்றுக் கொண்ட

தந்திரம். சென்ற முப்பது வருஷங்களாகத்தான் தெரிந்து கொண்டிருக்கிறோம். இன்னும் சரியாக முதிர்ச்சியடைய வில்லை. தவிரவும் தமிழ்ப் பத்திரிகைகளுக்கு ராஜாங்கத்தார் உதவி கிடையாது. மேலும் தமிழ் நாட்டிலோ முழுவதும் தமிழ் நடையைவிட்டு இங்கிலீஷ் நடையில் தமிழை எழுதும் விநோத பழக்கம் நமது பத்திராதிபர்களிடம் காணப்படுகிறது. முதலாவது நீ எழுதப்போகிற விஷயத்தை இங்கிலீஷ் தெரியாத ஒரு தமிழனிடம் வாயினால் சொல்லிக் காட்டு. அவனுக்கு நன்றாக அர்த்தம் விளங்குகிறதா என்று பார்த்துக் கொண்டு பிறகு எழுது. அப்போதுதான் நீ எழுதுகிற எழுத்து தமிழ் நாட்டிற்குப் பயன்படும். இல்லாது போனால் நீயும் சிரமப்பட்டு மற்றவர் களுக்கும் பயனில்லாமல் போகிறது. சில சமயங்களில் சில பத்திரிகைகளை வாசித்துவிட்டு ஐயோ, இவ்வளவு காகிதத்தில் எத்தனையோ ஆச்சரியங்களும் எத்தனையோ சந்தோஷங்களும் எழுதலாமே என்று எண்ணி வருத்தப்படுவதுண்டு (1981 : 208) என்று விளக்குகிறார். மேலும் ''வெளியூர் ஜனத் தலைவர்களும், ஆங்கில பண்டித சிகாமணிகளும் தமிழ்ப் பத்திரிகைகளைச் சரியானபடி கவனிப்பதில்லை. அந்தந்த ஊரில் நடக்கும் பொதுக் காரியங்களையும், அவரவர் மனதில் படும் புது யோசனை களையும் தெளிந்த தமிழிலே எழுதி தமிழ்ப் பத்திரிகைகளுக்கு அனுப்புதல் வேண்டும்'' (1981 : 203) என்று பத்திரிகை மொழி பற்றி பாரதி விளக்கிச் சொல்கிறார். அதோடு, பத்திரிகைகளில் புதிய புதிய செய்திகள், புதிய புதிய யோசனைகள் ஆகிய வற்றைத் தமிழில் எழுதி அனுப்புதல் வேண்டும் என்று மக்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றார் பாரதி. பத்திரிகைகளின் பணி புதிய புதிய கருத்துக்களை உடனுக்குடன் தருவதாகும். ஆகவே சமுதாயத்தில் பத்திரிகைகள் புதிய விழிப்புணர்வை ஏற்படுத்து வனவாக விளங்குகின்றன. மேலும் பாரதியார் புதிய செய்தி களையும், யோசனைகளையும் தாம் எடுத்துச்-சொல்வதொடு, மக்களிடமிருந்தும் வரவேற்பது நன்கு தெரிய வருகின்றது.

மொழி பெயர்ப்பும் பத்திரிகைகளும் :

பத்திரிக்கையில் மொழி பெயர்த்து எழுதும் போது ஓரளவிற்கு மக்கள் புரிந்து கொள்ளும் சொற்களைப் பயன்படுத்த வேண்டும் என்பது பாரதியாரின் கொள்கை. எடுத்துக்காட்டாக, ''சென்னையில் இங்கிலீஷ் பத்திரிகைகளிலிருந்து வர்த்த மானங்கள் மொழி பெயர்த்தெழுதும் போது அர்த்தமாகாத தமிழெழுத்தில் எழுதிப்போட்டுவிடுகிறார்கள். மேலும் அவர்களெழுதும் வியாக்கியானங்கள் கூட இங்கிலீஷ்

தோரணையை அனுசரித்துப் பிழை தமிழில் எழுதப்பட்டிருப்ப தால் நம் போன்ற ஸாமானிய ஜனங்களுக்குப் பொருள் விளங்குவது வெகு கஷ்டமாகயிருக்கிறது'' (1984: 71) என்று குறிப்பிடு கிறார். பிற மொழியிலிருந்து தமிழ் மொழியில் மொழி பெயர்த்து எழுதும் போது மக்கள் புரிந்துகொள்ளும் எளிய நடையில் இருத்தல் வேண்டும்.

''கூடியவரை பேசுவது போலவே எழுதுவதுதான் உத்தம மென்பது என்னுடைய கட்சி. எந்த விஷயம் எழுதினாலும் சரி, ஒரு கதை அல்லது ஒரு தர்க்கம், ஒரு சாஸ்திரம், ஒரு பத்திரிகை விஷயம் எதை எழுதினாலும் வார்த்தை சொல்லுகிற மாதிரியாகவே அமைந்துவிட்டால் நல்லது. பழக்கமில்லாத ஒரு விஷயத்தைக் குறித்து அதாவது ஜனங்களுக்குச் சற்றேனும் பழக்கமில்லாமல் தனக்கும் அதிக பழக்கமில்லாத ஒரு விஷயத்தைக் குறித்து எழுத ஆரம்பித்தால் வாக்கியம் தத்தளிக்கத்தான் செய்யும் சந்தேகமில்லை. ஆனாலும் ஒரு வழியாக முடிக்கும் போது வாய்க்கு வழங்குகிறதா என்று வாசித்துப் பார்த்துக் கொள்ளுதல் நல்லது. அல்லது ஒரு நண்பனிடம் படித்துக் காட்டும் வழக்கம் வைத்துக் கொள்ள வேண்டும். பிறகு கோணல், திருகல் (twisting expressions, explaining in a round about way, misleading nature of expression, etc ,) ஒன்றுமில்லாமல் நடை நேராகச் செல்ல வேண்டும். முன் யோசனையில்லாமலே நேராக எழுதும் திறமையை வாணி கொடுத்து விட்டால் பின்பு சங்கடமில்லை. ஆரம்பத்திலே மனதில் கட்டி முடிந்த வசனங்களையே எழுதுவது நன்று. உள்ளத்திலே நேர்மையும், தைர்யமு மிருந்தால், கை பிறகு தானாகவே நேரான எழுத்து எழுதும் தைரியம் இல்லாவிட்டால் வசனம் தள்ளாடும். சண்டிமாடு போல ஓரிடத்தில் வந்து படுத்துக் கொள்ளும். வாலைப் பிடித்து எவ்வளவு திருகினாலும் எழுந்திருக்காது. வசன நடை, கம்பர் கவிதைக்குச் சொல்லியது போலவே தெளிவு, ஒளி, தண்மை, ஒழுக்கம் இவை நான்குமுடையதாகயிருக்க வேண்டும். இவற்றுள் ஒழுக்கமாவது தட்டுத் தடையில்லாமல் நேரே பாய்ந்து செல்லும் தன்மை, நமது தற்கால வசன நடையில் சரியான ஓட்டமில்லை. தள்ளாட்டம் அதிகமாகக் காணப்படுகிறது. உள்ளத்திலே தமிழ்ச் சக்தியை நிலைநிறுத்திக் கொண்டால் கைநேரான தமிழ் நடை எழுதும்'' (1981 : 191) என்று உரைநடையைப் பற்றி பாரதி கூறுகின்றார். பத்திரிகையினைப் படிக்கின்ற மக்கள், அதில் சொல்லியுள்ள கருத்துக்களை

உடனே புரிந்து கொள்ள வேண்டும் என்று பாரதி எண்ணியுள்ளதையும் அதன்மூலம் பயன்பெற வேண்டும் என்ற சமுதாய நோக்கினைக் கொண்டிருந்ததையும் இதன் மூலம் அறிய முடிகின்றது

பத்திரிகையில் எழுதுவோர்கள் இலக்கணப்பிழைகள் இல்லாமல் எழுத வேண்டும் என்று பாரதி கூறுகின்றார். ஏனெனில் பிழைகளுடன் எழுதும் போது படிப்பதற்குக் கடினமாக இருக்கும். ஒன்றும் புரியாமல் போவதற்கும் தவறான பொருளையும் எண்ணுவதற்கும் வாய்ப்பேற்படுகிறது. இதனையே "இந்தியாவிலுள்ள தேசபாஷைப் பத்திரிகைகளின் நிலைமை சில அம்சங்களில் மிகவும் பரிதாபத்துக்கிடமாக இருக்கிறது. கடிதங்களெழுதுவோரில் பலர் இலக்கணப் பயிற்சி கூட இல்லாமல் பத்திரிகைக்கெழுதத் துணிகிறார்கள். அவற்றைப் பத்திராதிபர்கள் சில சமயங்களில் பிழைகளைக் களையாமலே ப்ரசுரம் செய்து விடுகிறார்கள். இதுவுமின்றி இலக்கணப் பயிற்சியற்ற சிலர் பத்திராதிபராக இருக்கும் விநோதத்தையும் இந்நாட்டிலே காண்கிறோம். நவீன நாகரீகத்தின் முக்ய சின்னங்களிலொன்றாகிய பத்திரிக்கைத் தொழிலில் நாம் மேன்மை பெற வேண்டுமானால் மேற்கூறப்பட்ட பிழைகளைத் தீர்த்துக் கொள்ளக் கடவோம்" (1986 : 454 to 55) என்று பாரதி குறிப்பிட்டுச் செல்கிறார்.

பிற மொழிகளிலுள்ள செய்திகளைத் தமிழில் மொழி பெயர்த்து எழுதும் போது தமிழ் வழக்கிற்கு ஏற்ப எளிய வழக்கு நடையில் எழுத வேண்டும் என்று கூறுகின்றார். அவர் கூறியுள்ளதைப் போன்றே எழுதியும் காட்டியுள்ளார் என்பதை அவரது கட்டுரைகளிலிருந்து உணர முடிகிறது. பத்திரிகையினை ஒரு கருவியாகக் கொண்டு தனக்குத் தெரிந்த/அறிந்த செய்திகளை மக்களுக்கு வழங்கியுள்ளார். பத்திரிகைகளில் பெண் விடுதலை, பெண் சுதந்திரம், நாட்டின் ஒருமைப்பாடு, விதவை-திருமணம்; கலைகள், தத்துவக் கருத்துக்கள், பிற செய்திகள், தொழிலாளர்களின் நிலை, அன்னியர் ஆட்சியின் கொடுமையினால் நம் நாட்டிற்கு நிகழ்ந்துள்ள துன்பங்கள், ஆங்கிலேயரின் ஆதிக்க வெறி போன்றவற்றைப் பற்றிப் பல கட்டுரைகள் எழுதியுள்ளார். அவை ஒவ்வொன்றிலும் வெவ்வேறு விளக்க முறைகளைக் கையாண்டுள்ளார் என்பதனை அவரது கட்டுரைகளைப் படிக்கும் போது நமக்கு நன்கு புலனாகிறது.

தத்துவக் கருத்துக்களைக் கூறும் பொழுது பெரும்பான்மையாக வடமொழிச் சொற்களே அதிகம் காணப்படுகின்றன.

ஏனெனில் வேதங்கள், இதிகாச புராணங்கள், யாவும் முதன் முதலில் சமஸ்கிருதம் என்றழைக்கப்படும் வடமொழியில் தான் எழுதப்பட்டன. அத்தகைய வேதக் கருத்துக்களைத் தமிழில் எழுதும் போது வடமொழிச் சொற்களே அதிகம் பயின்று வருகின்றன.

எ. கா : **மூடபக்தி**களிலே மிகவும் தொல்லையான **அம்சம்** யாதெனில் எல்லாச் செய்கைகளுக்கும் நாள், **நக்ஷத்திரம், லக்னம்** முதலியன பார்த்தல். **க்ஷவரம்** பண்ணிக் கொள்ள வேண்டுமென்றால் அதற்குக் கூட நம்மவர் **மாஸப் பொருத்தம் பக்ஷப் பொருத்தம், திதிப் பொருத்தம்** இத்தனையும் பார்த்தாக வேண்டி யிருக்கிறது" (1981 : 8) என்பார் பாரதி.

பிரமனைப் பற்றிக் கூறும்போதும் அதிகம் வடசொற்களே காணப்படுகின்றன.

எ. கா : "பிரம்மம் என்பது வேள்வியையும், மந்திரத்தையும் ஞானத்தையும் குறிப்பிட்ட வேதரிஷிகளால் வழங்கப் பட்டது... ... ... நாராயணன் பரிபாலமூர்த்தி. பரப்ரஹ்மம் அவரே. சிவன் ஸ்ம்ஹாரமூர்த்தி. பரப்ரஹ்மம், அவரே. பிரம்மா சிருஷ்டி மூர்த்தி. அவரே ஸாக்ஷாத் பரப்ரஹ்மம், அவருடைய பெயரைத்தான் ப்ரஹ்மத்திற்கு வைத் திருக்கின்றது. இந்திரன், அக்கினி, வாயு, வருணன் என்ற நாமங்கள் வேதத்தில் பரமாத்மாவுக்கே வழங்கப் படுகின்றன" (1981 : 17).

பொதுவாக இரைது கட்டுரைகளில் வடசொற்கள் அதிக அளவில் இடம் பெறுகின்றன. என்றாலும் தத்துவக்கருத்துக்களைக் கூறும் போது இன்னும் அதிகமான வட சொற்களைக் காண முடிகிறது. மேலும் தத்துவக்கருத்துக்களை விளக்கும் போது சிறிய வாக்கியங்களையே பயன்படுத்துகிறார். படிப்பவர் களைச் சிந்திக்கத் தூண்டும் வினா அமைப்பையும் ஆங்காங்கே கையாண்டுள்ளார் பாரதி.

எ. கா : நம்பிக்கை உண்டானால் வெற்றி உண்டு. அந்த நம்பிக்கையின் முக்கிய லக்ஷணம் என்னவென்றால் விடா முயற்சி. மனத்திற்குள் நிலைத்த நம்பிக்கை இருந்தால் செய்கை தடைபடுமா? முயற்சி தூங்குமா? இடுக்கண் பயமுறுத்துமா? உள்ளம் சோருமா?" (1981 : 31) இவ்வாறு வினாக்

கணைகளை ஆங்காங்கே ஏவி நம்மைச் சிந்திக்கத் தூண்டும் ஆற்றல் இவரது எழுத்தில் காணப்படுவதை, உணர முடிகிறது. இத்தகைய எழுதும்முறை பத்திரிக்கைகளில் இடம் பெற்று பலருக்கும் பயன்படும் பொழுது மொழியாற்றல் பெருகுகிறது எனலாம்.

படிப்பவர்கள் மனதில் உணர்ச்சி அவைகளை எழுப்பக்கூடிய வினாக்களும், சாட்டையடி போன்ற சொற்களும், உவமைக் கதைகளும் இவரது எழுத்தில் காணப்படுகின்றன. பாரதியார் வாழ்ந்த காலத்தில் கவிஞர்கள் சிலேடை, யமகம், திரிபு போன்ற புரியாத கவிதைகளை இயற்றி வந்துள்ளனர். அத்தகைய கவிதைகளினால் மக்களுக்கு எவ்விதப் பயனும் கிட்டாது. என்பதனை நன்கு உணர்ந்த பாரதி, அத்தகைய கவிஞர்கள் நல்லமுறையில் தமது திறனை வளர்த்துக் கொள்வதற்காகச் சில கருத்துக்களை ஒரு சிறு எடுத்துக்காட்டின் மூலம் விளக்குகிறார்.

எ. க. :- ‘‘மலைப்பாம்புக் கதை கேட்டிருக்கிறீர்கள் அல்லவா? அதன் வாலிலே தீப்பற்றி எரியுமாம். மலைப்பாம்பு சுகமாகக் குறட்டுவிட்டுத் தூங்குமாம். செல்லரித்துக் கொண்டு போனது நமது ஸ்மரணையிலே தட்ட வில்லை அத்தனை கர்வம். அத்தனை கொழுப்பு அத்தனை சோம்பர்’’ (1981 : 55). மேலும் காலத்திற் கேற்ப மொழி நடையும் மாறவேண்டும் என்ற கொள்கை யினையும் முன் வைத்துள்ளார் பாரதி.

‘‘காலம் மாற, மாற, பாஷை மாறிக் கொண்டு வருகிறது. பழைய பதங்கள் மாறிப் புதிய பதங்கள் உண்டாகின்றன. புலவர் அந்த அந்தக் காலத்துச் ஜனங்களுக்குத் தெளிவாகத் தெரியக் கூடியபதங்களையே வேண்டும். அருமையான உள்ளக் காட்சிகளை எளிமை கொண்ட நடையில் எழுதுவது நல்ல கவிதை. ஆனால் சென்ற சிலநூற்றாண்டுகளாக புலவர்களும், சாமியார்களும் சேர்ந்து வெகு சாதாரண விஷயங்களை அஸாதாரண அலௌகிக அந்தகார நடையில் எழுதுவதுதான் உயர்ந்த கல்வித்திறமை என்று தீர்மானஞ் செய்து கொண்டார்கள்’’. (1981 : 56) என்று சொல்லிக் கவிஞர்களுக்கு மொழிநடை எவ்வாறு அமைய வேண்டும் என்று எடுத்துரைக் கிறார் பாரதி.

• பாரதியின் மொழி நடையில் பேச்சு வழக்குச் சொற்கள் அதிகம் காணப்படுகின்றன. இந்நடைதான் மக்கள் எல்லோரையும் கவர்ந்திருக்கிறது என்பதை அறிய முடிகிறது.

எ-கா : “மானங்கெட்ட ஜெர்மானிக் காரப் பயல்கள் நேசக் கட்சியாருடைய நியாயங்களைக் காட்டிலும் தங்களுடைய இரும்பு வலிமையே பெரிய வலிமை என்று எண்ணி வீண் இறுமாப்புக் கொண்டு சண்டை நடத்திக் கொண்டு வருகிறார்கள். இன்றைக் கானாலும் சரி, நாளைக் கானாலும் சரி நாளன்றைக் காளாலும் சரி, ஒரு மாசம் சென்றாலும், ஒரு வருஷம் சென்றாலும் என்றைக்கானாலும் ஜெர்மனியை நம்மால் தோற்கடிக்க முடியுமாதலால் ருஷ்யாவில் கோஸ்கியை நீக்கி அதிகாரம் பெற்றிருக்கும் மாக்ஸிமிஸ்த் கட்சியார் ஜெர்மனியுடன் தனிச் சமாதானமும் பேசத் தொடங்கியிருப்பது பெரிய காரியமில்லை” (1981 : 85) என்று கூறி இதனை விளக்குகிறார் பாரதி.

பத்திரிகைகளைப் படிக்கும் போது ஒரே விதமாக (Stereo-type) எழுதிக் கொண்டே போனால் படிப்பவர்களுக்கு அலுப்பு (bore)/வெறுப்பு தோன்றிவிடும் ஆகவே பல புதிய உத்திகளைக் (techniques) கையாள்வது இதனைத் தவிர்க்க உதவும். எடுத்துக்காட்டாக பாரதி உரையாடல் (conversation) வடிவில் சில செய்திகளைக் கூறியுள்ளார்:

எ-கா : **“சந்திர தீவின் ராஜா கேட்கிறான் :** இன்று காலையில் இரண்டு யானைகளைக் கொன்றோமே? அது பெரிய பாவமன்றோ? ஆஹா! எத்தனை நேர்த்தியான மிருகங்கள்! ஆஹா! எத்தனை அழகு, எத்தனை எத்தனை ஆண்மை வீரம், எத்தனை பெருந்தன்மை. அவற்றைக் கொன்றோமே, இது கொடிய பாவமன்றோ? என்றான்.

காசி மந்திரி ஸுதாமன் சொல்லுகிறான் :-

ஆரியபுத்திர யானையைக் கொல்வது மாத்திரந்தானா பாவம்? ஆடு, மாடு, கோழிகளை தின்கின்றோமே அது பாவமில்லையா? என்றான்” (1981 : 143).

இவ்வாறு செய்திகளை உரையாடல் வடிவில் தரும்போது படிப்பதற்கும் ஆர்வம் தோன்றும். படிப்பவர்களையும் சிந்திக்கத்

தூண்டும். இது ஒரு புதிய உத்தியாகவும் அமையும். மேலும் பத்திரிகையில் செய்திகளை எழுதும் போது சிறு சிறு வாக்கியங்களாக எழுதினால் படிப்பவர்கள் எளிதில் புரிந்துகொள்வார்கள்.

எ-கா : ''சிறிய தானியம் போன்ற மூக்கு : சின்னக் கண்கள் ; சின்ன தலை ; வெள்ளைக் கழுத்து ; அழகிய மங்கல்-வெண்மை நிறமுடைய மட்டுப் போர்த்த வயிறு ; கருமையும் வெண்மையும் கலந்த சாம்பல் நிறத்தாலாகிய பட்டுப் போர்த்த முதுகு ; சிறிய தோகை ; துளித் துளிக் கால்கள்'' (1981 : 138) என்ற விளக்கத்தினைப் படிக்கும்போது கருத்தும் தெளிவாகும் ; வாக்கியங்களும் மனதில் நன்கு பதியும். இச் சொற்கள் அனைத்தும் ஓவியம் போல் நம் மனதில் பதிந்து அக்குருவியின் தோற்றத்தினை நம்மனக்கண் முன்னால், நிறுத்தி விடுகின்றன எனலாம்.

பரவல் செய்தித் தொடர்பும் நாட்டு/சமுதாய வளர்ச்சியும் :

பரவல் செய்தித் தொடர்பின் மூலமாக ஒரு புரட்சியினையே நாட்டில் (குறிப்பாக நாட்டுவளர்ச்சியிலும், சமுதாய வளர்ச்சியிலும்) ஏற்படுத்திவிடலாம். அவற்றிலும் குறிப்பாகப் பத்திரிகைகள் மூலமாக விரைவிலும் ஆற்றல்மிக்க வகையிலும் உடனே செய்ய முடியும். அதற்கு அத்தகைய சக்தி உண்டு. அதனால்தான் பாரதியார் தமது பத்திரிகைகளில் நாட்டு விடுதலை உணர்வை ஒவ்வொரு மனிதனும் பெற வேண்டும் என்பதற்காக, உணர்ச்சியைத் தட்டி எழுப்பக் கூடிய கவிதைகளைப் படைத்துத் தந்துள்ளார் எனலாம்.

எ-கா : ''ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லை; ஜாதியில்
இழிவு கொண்ட மனிதரென்ப திந்தியாவில் இல்லையே
வாழி கல்வி செல்வ மெய்தி மனம் மகிழ்ந்து கூடியே,
மனிதர் யாரு மொருநிகர்-ஸமான மாகவாழ்வமே''!

என்ற பாடல் மூலம் நாட்டு விடுதலை உணர்வை ஒவ்வொரு தமிழன் நெஞ்சிலும் ஊட்டியவர் பாரதி. கனல் தெறிக்கும் அவரது பாடல்களும், உரைநடையும் ஆங்கில அரசினையே ஆட்டம் காணச் செய்தன என்றால் அது மிகையன்று. தமது கட்டுரைச் செய்திகளில் அவ்வப்போது தமிழின் பெருமை பற்றிப் பறைசாற்றி வந்துள்ளார் மகாகவி.

எ.கா : "நமது ஜனத் தலைவர்கள் இங்கிலீஷில் யோசிப்பதை யும் நிறுத்தினால் ஒழிய நமது பாஷை மேன்மைப்பட இடமில்லை என்று வற்புறுத்திச் சொல்லுகிறார்" (1981 : 202) என்பது இதற்குச் சிறு எடுத்துக் காட்டாகும். இதுபோன்ற பல எடுத்துக் காட்டுக்களைக் காட்ட முடியும். பத்திரிகையின் மூலம் மொழி மொழி வேறுபாட்டை வளர்க்காமல் தேச ஒருமைப்பாட்டையும் வளர்க்கிறார் பாரதி. (national integration & nationalism) எல்லா மொழிகளின் பெருமையினையும் அவ்வப் போது எடுத்துக் கூறுகின்றார். சங்கீதம் போன்ற கலைகள் பற்றி எழுதும் போது, மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக மிக எளிய நடையில் எழுதுகின்றார். இதில் அதிக வடசொற்கள் கலப்பது இல்லை. பேச்சு வழக்கு அதிகம் காணப்படுகிறது. எடுத்துக் காட்டாக "எந்த ஜில்லாவுக்குப் போ, எந்த கிராமத்திற்குப் போ எந்த வித்வான் வந்தாலும், இதே கதைதான் தமிழ் நாட்டு ஜனங்களுக்கு இரும்புக் காதாக இருப்பதால் திரும்பத் திரும்பத் திரும்பத் திரும்ப ஏழெட்டுப் பாட்டுக்களை வருஷக் கணக்காகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். தோற்காது உள்ள தேசங்களிலே இந்தத் துன்பத்தைப் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள்" (1981 : 213) என்பார் பாரதியார். பெண் விடுதலை, பெண் சுதந்திரம் இவற்றைப் பற்றி பாரதி எழுதும் போது மிகத் தெளிவாக எளிய நடையில் எழுதுகின்றார். சில இடங்களில் அது கட்டளையிடுவது போலவும், சில இடங்களில் யாசித்துக் கேட்பது போலவும் அது (மொழி நடை) அமைந்துள்ளது எனலாம். இதன் மூலம் அவர் மக்களிடம் ஈடுபாட்டினை ஏற்படுத்திக் கொள்ளமுடியும் என நம்பினார்.

எ-கா : "தமிழ் நாட்டு மாதராகிய என் அன்புக்கும் வணக்கத்துக்குமுரிய சகோதிரிகளே, இத்தனை பெருமை வாய்ந்த தமிழ் நாகரீகத்தின் எதிர்கால வாழ்வு உங்களுடைய பயிற்சிகளையும் முயற்சிகளை யும் பொறுத்திருக்கிறது ...

மனித நேயமோ கொந்தளிப்புற்ற கடலிடைப் பட்டதொரு சிறு தோணி போல் அலைப்புண்டும், புரளுண்டும், மோதுண்டும், எற்றுண்டும், சுழற்றுண்டும் தத்தளிக்கிறது. இந்த மஹா ப்ரளய காலத்தில் தமிழ் நாகரீகம் சிதறிப் போகாதிருக்கும்படி கடவுள் அருள் புரிவாராகுக. அஃது அங்ஙனம் சிதறாமலிருக்குமாறு தகுந்த கல்விப் பெருமையாலும் ஒழுக்க மேன்மையாலும் விடுதலையின் சக்திகளாலும்

அதைக் காப்பாற்றக் கூடிய திறமையை உங்களுக்குப் பரப்ரம்மம் அருள் செய்க" (1981 : 283).

பாரதி இலக்கியமும் பத்திரிகைகளும் :

கதைகளைப் பற்றி எழுதும் போது அதிக வடமொழிச் சொற்கள் காணப்படுவதில்லை. தேவைக்கு ஏற்ப இலக்கிய வழக்குச் சொற்களும், பேச்சு வழக்குச் சொற்களும் காணப் படுகின்றன.

எ-கா "பிராமண விதவைகள் பலர் ஒரு புறத்திலேயிருந்து தமக்குள் ஏதோ பேசிக் கொண்டிருக்கிறார்கள். சுமங்கிலிப் பிராமணத்திகள் ஒரு பக்கத்தில் தலை குனிந்து நின்று கொண்டு போவோர் வருவோரை கடைக் கண்ணால் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் ...

சில முகமதிய ஸ்திரிகள் முட்டாக்குப் போட்டு தலையையும் முகத்தையும் மூடிக் கொண்டு திசைக்கொருத்தியாகப் பார்த்து உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள்" (1981 : 296).

தொழிலாளர்கள் பற்றிக் கூறும் போது வெளி நாடுகளில் தொழிலாளர்கள் எவ்வாறு இருக்கின்றனர் என்று எடுத்துக் காட்டுகின்றார். இதன் மூலம் அவரது **உலகக் கண்ணோட்ட அறிவினை** அறிய முடிகின்றது.

எ-கா : "இங்கிலாந்து முதலிய தேசங்களிலுள்ள தொழிலாளிகள் பார்லிமெண்ட் சபையில் தாம் ஆதிக்கம் பெற்று, அதன் மூலமாகத் தம்முடைய கட்சியாரே மந்திரிகளாகும் படியான நிலையை ஏற்பாடு செய்து கொண்டு இவ்வழியாலே ராஜ்ய அதிகாரத்தையும் தம்முடையதாகச் செய்து கொள்ளும்படி மும்மரமான முயற்சிகள் செய்து வருகின்றனர். (1981:425)

"ருஷ்யாவில் சமீபத்தில் அடுக்காக நிகழ்ந்து வரும் பல புரட்சிகளின் காரணத்தால் அவ்விடத்து சைனியங்களில் பெரும் பகுதியார் தொழில் கட்சியையும் அபேத கொள்கைகளையும் சார்ந்தோராய்விட்டனர்" (1981 : 426).

"இந்தியாவில் இந்த நிலைமை நேரிடாத வண்ணம் ஜனத் தலைவர்கள் இப்போதே தீவிரமாகவும், பலமாகவும் வேலைசெய்யத் தொடங்க வேண்டும். தொழிலாளிகளையும் மற்ற ஏழைகளையும் நாம் சாதாரண மனிதராக நடத்த வேண்டும் அதிலும் தொழிலாளிகளின் விஷயத்தில் நாம் உயர்ந்த மதிப்புச் செலுத்தவேண்டும். (1981 : 427 - 28) என்று தொழிலாளர்களின் பல்வேறு பிரச்சினைகளைப் பற்றியும் தொழில் நிலை - முன்னேற்றம் பற்றியும் பாரதி விளக்கிக் கூறுகின்றார். தொழிலாளர்களை அடிமைகளாகக் கருதி அவர்களை அடக்குமுறையினால் விலங்குகளாக நடத்தியதால் தான் வெளிநாடுகளில் புரட்சி தோன்றி நாடுகள் சுதந்திர மடைந்தன. ஆதுபோலவே இந்தியாவிலும் ஏற்படவெகு நாட்களாகாது. ஆகையால் தொழிலாளர்களின் **மேன்மையினை எடுத்துக்** கூறியும் அவர்களை **மதிக்கும் திறனையும்** அறிவுறுத்துகின்றார்

ஆங்கிலேய ஆட்சியால் இந்தியாவில் நிலைமை எவ்வாறு சீரழிகின்றது என்பதை மக்களுக்குத் தெளிவாக எளிய மொழி நடையில் விளக்கிக் கூறுகின்றார் பாரதி.

எ-கா : "அந்நிய நாட்டுச் சரக்குகளைச் சிறிது சிறிதாவது விலக்கினால் தான் சுதேசியமான சாமான்கள் எவ்வெவை நமக்கு வேண்டியிருக்கிறதென்ற குறைபாடுகள் தோன்றும். பரதேசிச் சரக்குயென்ற காரணத்தால் நமக்கு ஒரு அருவருப்பும் வெறுப்பும் உண்டானால் அன்றிச் சுதேசி சாமான்களைச் செய்ய வேண்டுமென்ற அவசியமும் ஆசையும் உண்டாக மாட்டாது" (1985 : 99).

என்ற அந்நிய நாட்டுப் பொருட்களை விலக்குவதினால் நமது ஒத்துழையாமை தன்மையை நிருபிக்க வழி ஏற்படும். அதன் மூலம் ஆங்கிலேயர்கள் ஆட்சிக்கு ஒரு முடிவு ஏற்படும் என்ற சுதந்திர உணர்வை மக்களிடையே பாரதி பரப்பலானார்.

ஆங்கிலேய ஆட்சியினை வரவேற்று அவர்களைப் போற்றும் பத்திரிகைகளுக்கும் மக்களுக்கும் பாரதியார் வார்த்தைகளால் சவுக்கடி கொடுக்கின்றார். இதற்காக அவர் பயன்படுத்தியுள்ள சொற்களில் கனல் தெறிக்கின்றது. **ஹிந்திபஞ்ச்** என்ற பத்திரிக்கை ஆங்கிலேயர் ஆட்சியை வரவேற்றுப் போற்றியது. சுதந்திரம் வேண்டி நின்ற காங்கிரஸ் சபையினை கேலிசித்திரம் ஒன்றின் மூலம் விளக்கியிருந்தது. அதனைக் **கண்டித்த** பாரதி

தமது கனல் தெறிக்கும் சொற்களால் கீழ்கண்டவாறு சாடுகின்றார்.

எ-கா : "நாகப்பூர் சபையை ஒரு அதிகாரி அநீதியாக நிறுத்தியது பற்றி இந்தப் பத்திரிக்கை நம்மவரின் மனது இத்தனை புண்படும்படியாக ஓர் குரூரச் சித்திரம் பதிப்பித்திருப்பது பிரிடிஷ் இந்தியாவிலே சிற்சில ஜனங்கள் சுதேசத்துரோகத்திலே பெரிய பரீக்ஷைகள் கொடுத்துவிட்டார்களென்பதைக்குறிப்பிடு கிறது. அதிகாரத்திலிருப்பவர்களின் தயவுக்கு நாய் போலக் காத்திருந்து, அதிகாரமிழந்திருப்பவர்களைப் பற்றிமனஞ்சுடப் பேசுவதற்கு மிகுந்த திறமை வேண்டுமா?" (1985 : 46).

இத்தகைய பத்திரிகை ஆசிரியர்களை **அனாரியர்கள்** என்றும், **தேசதுரோகிகள்** என்றும் பாரதி கூறுகின்றார். இதன் மூலம் பத்திரிகைகளின் சமுதாயப்பங்கு நாட்டுவளர்ச்சியில் அவை பெற்றுள்ள இடம் ஆகியவற்றையும் அவர் சுட்டிக் காட்டுகிறார்.

ஆங்கிலேயரின் ஆட்சியினால் பல தேச பக்தர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். அதனை மக்களுக்குத் தெளிவாகத் தமது பத்திரிகையின் வாயிலாக எடுத்துக் கூறினார் பாரதி

எ-கா : "பிரிடிஷ் கவர்ன்மெண்டார் இந்தியாவையடக்கி யாளும் பொருட்டு ஆதரித்து வரும் அநேக சட்டங்கள் அவர்களுக்கு அபகீர்த்தியை விளைவிக்கத் தக்கவையாயிருக்கின்றன. ஜனங்களுக்கு இராஜாங்க விஷயங்களில் அதிகாரம் கொடாமல் வரிவசூல் செய்தல், தேசாபிவிருத்தியின் நிமித்தம் பாடுபடும் பெரிய மகான்களை வெளியேற்றிவிடுதல், பத்திரிகை களை அச்சிட்டுப் பிரசுரம் செய்யும் முத்திரா சாலை களை ஜப்தி செய்து விடுதல், இராஜத் துரோகி களென்று சொல்லித் தேசபக்தர்களை நீடித்த காலம் கடுங்காவலில் வைத்தல். இத்தகைய சட்டங்களை நோக்கில் நாகரீகமுள்ளவர் செங்கோல் செலுத்தி வருகிறார்களென்று ஒருவரும் சொல்ல மாட்டார்கள்" (1985 : 64). இவ்வாறு நாட்டில் நடைபெறும் செய்திகளைஉடனுக்குடன் தமது எளிய நடையின் மூலம் மக்களுக்கு எடுத்துக் காட்டுகின்றார்,

Visualisation : கருத்துக்களைக் காட்சியாக்குதல்.

முதன் முதலில் கார்ட்டூன் போன்ற புதிய முறையினைத் தமிழிலே அறிமுகப்படுத்தியவர் பாரதிதான் என்பதை அறியும் நிலையில் அவரது படைப்பாற்றலை நம்மால் உணர முடிகிறது.

வெறும் அரசியல் செய்திகளை மட்டுமே பிரசுரிக்காமல் கலைப் பகுதி, இலக்கியப் பகுதி போன்ற புதிய, புதிய பகுதிகளைப் பத்திரிகைகளில் இடம் பெறச் செய்து அவற்றிற்கு உயிரூட்டியவர் பாரதி. அதோடுமட்டுமல்லாமல் சன்மானம் தரும் முறையையும் தகவல்கள் தருகின்றவர்கள் உண்மையான தகவல்கள் என்று உத்திரவாதம் தர வேண்டும் என்று கேட்டும் பிரசுரம் செய்துள்ளதை எண்ணும்போது அவரது துணிவையும், சமுதாய உணர்வினையும் எண்ணிப் போற்றாமல் இருக்க முடியாது.

எ-கா - ‘‘சர்க்காரின் அக்கிரம அதிகார முறைகள் ஜனங்களிடத்தில் பொதுவாயுள்ள தீய வழக்கங்கள் ஜனங்களுக்குள் வழங்கிவரும் பழமொழிகளின் தாத்பரியங்கள், கர்ன பரம்பரையாய்ச் சொல்லப்பட்டு வரும் சரித்திரங்கள், கதைகள், பாட்டுக்கள்.

நவீன நிலைமைகளுக்கேற்றப்படி இயற்றிய நாடகங்கள், கவிகள் விநோதக் கதைகள் (novels).

மேற்கண்ட விஷயங்களின் சார்பாக யார், யார் எங்கே யிருந்து நிருபங்களை யனுப்புகிறார்களோ அவரவர்களுக்குத் தக்கபடி கைம்மாறு அளிப்போம். எங்கள் பத்திரிகையின் வாயிலாய் வெளிப்படுத்தும் விஷயங்களுக்கே பொருள் உதவப் படும்’’ (1984 : 11 - 12).

இவ்வாறு சமுதாயத்தோடும், சமுதாயப் பிரச்சினைகளோடும் இரண்டறக் கலப்பதுதான் பத்திரிக்கை ஆசிரியரின் பொறுப்பு, கடமை, பத்திரிகை தர்மம் என்பதைச் சக பத்திரிகையாளர் களுக்கு விளங்க வைத்தவரும் பாரதியே. இது அவர் கொண்டிருந்த பத்திரிகைப் பணி ஈடுபாட்டினையும் தெளிவாக்கு கிறது என்றால் அது மிகையன்று.

பத்திரிகை ஆசிரியர் ஒருபோதும் தம் பண்பை, பத்திரிகை தர்மத்தை இழக்கக்கூடாது என்பது தான் பாரதி கற்பித்த உயர்ந்த போதனை. பெருமைக்கு இழுக்கு நேரும் வகையில்

உண்மையான பத்திரிகையாசிரியர் தமது எழுதுகோலைப் பயன்படுத்தக் கூடாது என்பதுதான் பாரதியாரின் கருத்தாகும். 'அமிர்த பஜார்' என்ற பத்திரிகை லார்டு கர்ஸனின் மனைவி இறந்ததைப் பாராட்டி எழுதியதைக் கண்டித்து பாரதி தமது இந்தியா பத்திரிகையில் கீழ்க்கண்டவாறு எழுதினார்.

> "உண்மையான ஆசிரியன் தனது விரோதிகளுக்குக் கூட துக்கமேற்பட்ட சமயத்தில் இரக்கமுடையவனாவனன்றி சந்தோஷமடையமாட்டான்" (1986 : 286)

என்று எழுதினார்.

பாரதியார் நடையில் நகைச்சுவையுணர்வு மலிந்திருப்பதைக் காணலாம். நகைச்சுவை உணர்வுடன் கூறினாலும் சிந்திக்கத் தூண்டும் வகையில் அமைந்திருப்பது பாரதியின் எழுத்தாற்றலை உணர்ந்து கொள்ள இடமளிக்கிறது. இவ்வுணர்வினைச் சமுதாய மேம்பாட்டிற்காகப் பயன்படுத்திக் கொண்டிருப்பது மிகவும் பாராட்டிற்குரியது. "மகாராஜராஜபூஜித மகாராஜ ஸ்ரீ ராஜமார்த்தாண்ட சண்டப் பிரசண்ட அண்டபகிரண்ட கவுண்டாதி கவுண்ட கவுண்டானுராப்திய ராமசாமி கவுண்டவர்களுக்கு வயது சுமார் ஐம்பதிருக்கும். நல்ல கருநிறம், நரை பாய்ந்த மீசை, கிருதா முன்புறம் நன்றாகப் பளிங்கு போல் தேய்க்கப்பட்டு நடுத்தலையில் தவடு பாய்ந்து, பின்புறம் ஒரு சிறிய முடிச்சுப் போட்டு விளங்கும் முக்கால் நரையான தலை. நெடுந்தூரம் குழிந்த கண்கள் இமைப்புறங்களில் காக்கைக்கால் அடையாளங்கள். பொடியினால் அலங்கரிக்கப்பட்ட மூக்கு. வெற்றிலைக் காவியினாலும் புகையிலைக் காற்றினாலும் அலங்கரிக்கப்பட்ட பற்கள் குத்துயிரோடு கிடக்கும் உதடு. ஆபரணங்கள். பொருந்திய செவிகள். பூதாகாரமான உடல். பிள்ளையார் வயிறு. ஒருவிதமான இருமல். அரையில் பட்டு ஜரிகை வேஷ்டி, விரல் நிறைய மோதிரங்கள், பக்கத்திலே வெற்றிலைத் துப்புவதற்கு ஒரு காலாஞ்சி. ஒரு அடைப்பைக் காரன். இதுதான் ராமசாமிக் கவுண்டர்" (1982 : 20). சின்ன சங்கரன் கதையில் வரும் ராமசாமிக் கவுண்டரை மிக அழகாக எளிய சொற்கள் மூலம் படைத்துக் காட்டியுள்ளார். ராமசாமிக் கவுண்டரின் செல்வாக்கினையும் பெருமையினையும் நகைச்சுவை உணர்வுடன் எடுத்துக் கூறியுள்ளார் பாரதி. அக்காலத்தில் ஜமீன்தார்கள் ஒரு வேலையும் செய்யாமல் ஓர் அரசனைப் போல் செல்வ போகத்தில் பலரது உழைப்பைக்

கொண்டு சொகுசாக வாழ்ந்து வந்தனர். வேலையாட்களை விரட்டி அவர்கள் கொழுத்திருப்பதை இவ்வர்ணணை மூலம் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகின்றார். இவற்றை மக்களுக்கு அறிவுறுத்துவதற்காகவே உரிய நடையில் பழகு தமிழில் எழுதியுள்ளார் என்பதனை அறிய முடிகிறது. சமுதாயத்தில் வாழும் ஏழை எளியோர் எவ்வாறு நடத்தப் படுகிறார்கள் - ஏமாற்றப்படுகிறார்கள் என்பதைக் காட்டி இதுபோன்ற நிலை சமுதாயத்தில் இருக்கக் கூடாது என்பதை வலியுறுத்துகிறார்.

முடிவுரை :

பாரதியார் பத்திரிகையின் மூலம் பரவல் செய்தித் தொடர்பின் பணியினை மக்களுக்கு அறிமுகப்படுத்தினார். சுதந்திரம் பெற வேண்டும் என்ற நோக்கத்தினை ஒவ்வொரு இந்தியன் மனத்திலும் தோற்றுவித்தார். மக்கள் மனதில் நம்பிக்கை, உண்மை, முயற்சி ஆகியவை தோன்ற வேண்டும் என்பதற்காகப் பல கட்டுரைகளை எழுதி அவற்றின் பெருமை களை எடுத்துரைத்தார். உள்ளத்திலே தெளிவிருக்கும் போது அது தெள்ளத் தெளிய எளிய முறையிலே அனைவருக்கும் புரியும்படியாக வெளியாகிறது என்பதிலே உறுதி கொண்டபாரதி பண்டிதர் வீட்டுச் சொத்தாக இருந்த தமிழைப் பத்திரிகை மூலம் பாமரர் உடைமையாக்கினார். பழைய பாதையில் சென்று கொண்டிருந்த தமிழ் மொழியைக் காலத்தின் தேவைக்கேற்ப முக்கியமான அரசியல் பொருளாதார சமுதாயச் சிக்கல்களைப் பற்றி எழுதும் கருவியாக மாற்றி வெற்றி கண்டுள்ளார். பழைய மரபுகளைப் புறக்கணிக்காது சில புதிய மரபுகளையும் ஏற்படுத்திக் காட்டியுள்ளார். கரடு முரடான அகராதியைப் புரட்டிப் பொருள் கொள்ளவேண்டிய சொற்களைக் கொண்டு நீண்ட நெடும் வாக்கியங்களை அமைப்பதற்குப் பதிலாக, எளிய சொற்களைக் கையாண்டு உணர்ச்சி மிக்க உரைநடையை அமைத்துத் தந்துள்ளார். பெண்களுக்குக் கல்வியும், சுதந்திரமும் வேண்டும் என்று முதன் முதலில் எடுத்துக் காட்டுகின்றார். மேலும் ஆங்கில மோகம் பிடித்தாட்டும் மக்களுக்குத் தமிழ் மொழியின் சிறப்பினை மிக அழகாகப் பத்திரிகை நடை மூலம் எடுத்துக் காட்டுகின்றார். பிற நாட்டு அறிஞர்களின் கருத்துக்களை மொழி பெயர்க்கும் போது அதனைத் தமிழ் மொழியில் மக்கள் யாவரும் எளிதில் புரிந்து கொள்ளும் அளவில் மொழி பெயர்க்க வேண்டும் என்று **மொழிபெயர்ப்புக் கொள்கை**யை விரித்துரைக்கின்றார். பல வேதக் கருத்துக்களை வடமொழியிலிருந்து தமிழில்மக்கள் புரிந்து

கொள்ளும் அளவிற்கு மிக எளிமையாக மொழி பெயர்த்துத் தந்துள்ளார். அவரது பத்திரிகைப் பணிகளின் வாயிலாகப் பல புதிய சொல்லாக்கங்களைத் தமிழ் மொழி பெற்றுள்ளது தெரிய வருகிறது. புதிய சிந்தனைகள், உண்மைகளையே வெளியிடுதல், உண்மைக்குப் புறம்பான செய்திகளைப் புறக்கணித்தல், கொண்ட கொள்கையில் உறுதி, தவறுகளைக் கண்டித்தல், இனங்களுக்கு நீதி வழங்கப் பாடுபடுதல், பிழைகளை ஒப்புக் கொள்ளல், போன்றவை பத்திரிக்கை உலகுக்குப் பாரதி தந்துள்ள கொடைகள் எனலாம். தனியொருவராகவே இருந்து ஸ்தாபனமாகச் செயற்பட்ட சுதந்திர பத்திரிக்கையாளர் பாரதியாவார். மகாகவியாக விளங்கிய ஒருவர் வன்மைமிக்க அசுர சாதனை புரிந்திட்ட பத்திரிகாசிரியராகவும் திகழ்ந்த பெருமை இவரையே சாரும்.

துணைநூற் பட்டியல்

1. பத்மநாபன், ரா. அ. (1984). (தொகுப்பாசிரியர்) **பாரதி புதையல் பொருள் திரட்டு** வானதி பதிப்பகம் : சென்னை.
2. பாரதியார் (1981). **பாரதியாரின் கட்டுரைகள்** வானதி பதிப்பகம் : சென்னை.
3. பாரதியார் (1984). **பாரதியார் கவிதைகள்** பூம்புகார் பிரசுரம் : சென்னை.
4. சுப்பிரமணியம், ஸி. எஸ். (1986). **பாரதி தரிசனம் — 1,** நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட் லிமிடெட். சென்னை.
5. தூரன், பெ. (1980). **பாரதி தமிழ்,** வானதி பதிப்பகம் : சென்னை.
6. Deseriev, J. (1973) Sociolinguistics **Linguistics.** 113 : 5-40

(சென்ற இதழ் தொடர்ச்சி)

சிதறிய சிலம்பு

என். சண்முகம்
7, மேற்கு ராஜாவீதி
ஆலத்தூர் - சென்னை - 600016.

கலிங்க நாடு! அதில் சிங்கபுரம், கலிங்கபுரம் என்ற இரு பிரிவுகள். இவ்விரு இடங்களிலிருந்து கொண்டு வசு என்பவனும் குமரன் என்பவனும் அரியணைக்கு உரிமை பாராட்டிப் பகைக் கோலம் பூண்டிருந்தனர். இவ்வாறு பகை மூண்டவர்களுக்கு இடையே வரும் அயல்நாட்டினருக்கு அல்லவோ ஆபத்து ஏற்படுகிறது.

சிங்கபுரத்தில் பிழைக்கலாம் என்று - பேராசையுடன் அல்ல- சிறிய ஆசையுடன் சங்கமன் என்னும் வணிகன் தன் மனைவி நீலி யுடன் வந்து சேருகிறான். இவ்விருவரின் முன்வினை - தீவினை என்னவென்று நமக்குத் தெரியவில்லை — சிலப்பதிகாரத்தில் சொல்லப்படவில்லை. சிங்கபுரத்து அரசு அதிகாரியான பரதன் - என்ன வினை செய்திருந்தானோ - சங்கமனை ஒற்றனெனக் கைது செய்து வசுவின் முன் நிறுத்தி விட்டான். சங்கமனுக்கு மரண தண்டனை கிடைக்க, பரதன் அதை நிறைவேற்றி விடுகிறான். நீலி தன் கணவனை இழந்த துயரம் தாங்காமல் பதினான்கு நாட்கள் சுற்றித் திரிந்து ஒரு மலையுச்சி மீதேறி உயிர் துறக்கும் பொழுது சாபமிடுகிறாள் — "எனக்கு இத்துன்பத்தைச் செய்தவர்கள் அவர்களது மறுபிறவியில் இதே துன்பத்தை அடைவார்களாக" — என்று!

பரதன் மறுபிறவியில் கோவலனாகப் பிறக்கிறான். அப்படி யானால் கண்ணகி யார்? முந்திய பிறவியில் பரதனின் மனைவி யாகத் தானிருக்க வேண்டும். ஏனெனில் "விழுவோள் இட்ட வழுவில் சாபம் பட்டனிர்", என்று கட்டுரை காதையில் சொல்லப் பட்டுள்ளதால் பரதனும் அவனது மனைவியுமே கோவலன் - கண்ணகியாகப் பிறந்திருக்க வேண்டும் எனத் தெரிகிறது.

சிலப்பதிகாரத்தைப் படிக்கும் பொழுது நெடுகிலும் கண்ணகியின் துன்பங்களையே விவரிக்கக் காண்கிறோம். நீலியிட்ட சாபத்தின்படி கோவலன் - அதாவது பரதன் - தான் துன்பங்களில் உழன்றிருக்க வேண்டும். ஆனால் அவனோ மதுரைக்குப் புறப்படும் வரையில் சுகபோகங்களிலேயே

திளைத்திருக்கிறான். புகாரிலிருந்து புறப்பட்டு மதுரையின் வீதியிலே கொலையுண்டது வரை சில நாட்களே தான் அவன் துன்புற்றிருக்கிறான். ஆனால் அவன் - கோவலன் - தான் இத்துன்பங்களை அடைந்ததை "முன் பிறவியில் என்ன தீவினை செய்தேனோ இப்பிறவியில் இத்துன்பத்தை அடைந்தேனே," என்று வாய்விட்டுச் சொல்லுவதற்கு முன்பே இறந்து விட்டான். வாழ்நாள் முழுவதும் துன்பத்தை அனுபவித்தவள் - கண்ணகி. முற்பிறவியில் யாருக்கும் எந்த விதக் கெடுதியும் செய்யாத கண்ணகி.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

கதையாசிரியர்களும் உத்திகளும்

டாக்டர் இரா. சண்முகவேலன்,
எம்.ஏ., எம்.பில்., பி.டி., பி.எச்.டி,
தமிழ்ப்பேராசிரியர்,
அ. வீ. வா நி. திரு புட்பம் கல்லூரி,
பூண்டி.

பொதுவாகத் தி.மு.க.வினர் மேடைப் பேச்சில் வல்லவர்கள். அதனால், அவர்தம் கதைகளில் சேச்சாளர்கள் கதைமாந்தர்கள் ஆயினர். சி. என். அண்ணாதுரையின் பார்வதி பி.ஏ.யும், 'தங்கத்தின் காதலனில்' வரும் சுந்தரியும் அ. மறைமலையானின் அவளும் ஒரு எம். எல். ஏ. யின் (1978) திலகமும் சான்றாவார்கள். "அண்ணாத்துரை சமுதாய சீர்திருத்தவாதியோடு, அரசியல்வாதியாகவும் இருந்ததால் அவரது எழுத்தில் அரசியல்வாதிகளின் பேச்சுக்கள் கதைக் கருவாக இடம் பெறலாயின"[135] என்பர். மேலும், கதை சொல்லப்படும் நோக்கு நிலையில் அமைந்த மொழிநடையில் மேடைப் பேச்சினை ஓர் உத்தியாக (Stage - speach as Technique) இவ்வியக்கத்தினர் கையாண்டனர். வேறு வகையாகச் சொன்னால், கதையைச் சொல்லும் கதையாசிரியரின் குரலோ, கதைமாந்தரின் குரலோ வெளிப்படாமல் மேடைப் பேச்சாளர் ஒருவரின் குரலாகவே மொழிநடை காணப்படுகிறது. சான்றாக :-

> மயிலும் மாதரும் தமது அழகைப் பிறர்காண வேண்டுமென்ற எண்ணத்துடன் இருப்பதாகக் கவிகள் கூறுவர். மயிலின் தோகை அவ்வளவு வனப்புடன் இருக்கும்போது அது பிறர் கண்களுக்குத் தெரியாமல் மறைந்து கிடப்பின் பயன் என்ன? கண்டோர் மனதில் களிப்பை உண்டாக்கும் ஒப்பற்ற பணியை அழகு செய்கிறது. அந்த அழகு, அன்றலர்ந்த பூவிலுண்டு! அந்தி வானத்திலுண்டு அதரத்தில் தவழும் அலங்காரப் புன்சிரிப்பிலுண்டு. கிளியின் கொஞ்சுதலில், குயிலின் கூவுதலில், மயிலின் நடனத்தில், மாதரின் சாயலில் உண்டு! சிற்பந்தில் உண்டு ஆனால் அதன் சிறப்பை முவதும் காண வல்லார் மிகச் சிலரே. ஆனால் மாந்தரின் எழில் அத்தகையதன்று அது கண்டவனை உடனே களிக்க வைக்கும் தன்மையது. "காற்று வீசும்போது

குளிர்ச்சி தருகிறேன் பாரீர்'' எனக் கூறுமா? அதன் செயல் நமக்கு அந்த இயற்கையான எண்ணத்தை உண்டாக்கும். அதுபோலவே, எந்த மாதும் 'என் அழகைக் கண்டாயோ' எனக் கேளார். ஆனால் தம் அழகைப் பிறர் கண்டனர், களித்தனர், என்பது அவர்களுக்குத் தெரியும். அதிலே பூரிப்பும், பெருமையும் அடையாத பெண்கள் மிகமிகச் சொற்பம்.

(— சி. என். அண்ணாதுரை, கபோதிபுரக்காதல்)

திராவிட இயக்கச் சித்தாந்தங்களை ஆராய்ந்தவர், ''பிராமணர்கள் பேசும் இடங்கள் தவிர பெரும்பாலும் மற்ற இடங்களை மேடைப் பேச்சு மொழி ஆக்கிரமித்துக் கொள்ளும்''[136] என்று இவ் வியக்கத்தாரின் புனைகதைகளை மதிப்பிட்டுரைப்பது இங்கு நினைவிற் கொள்ளத் தக்கதாகும்.

தமிழ்மொழியின் இனிமையையும் மேன்மையையும் எடுத்துக்கூறிப் போற்றியதைப் போலத் திருக்குறளின் பெருமையையும் புகழையும் பாராட்டிப் பரப்பினர். பெரியார், திருக்குறளை ஊன்றிப் படிப்பவர்கள் உறுதியாகத் தன்மான உணர்ச்சியைப் பெறுவார்கள். மனுதருமத்திற்கு உண்மையான மறுப்பு நூல் திருக்குறளேயாகும். திராவிடர் கழகம் திருக்குறளைப் பின்பற்றிச் செயற்படும் கழகம். இந்த நாட்டில் மனுதருமம் ஒழித்து, மனிதத் தன்மை ஏற்படப் பாடுபட்டு வரும் கழகத்திற்குக் குறள் வழிகாட்டி என்றெல்லாம் கூறியதோடு நில்லாமல் ''யாரேனும் நீ என்ன மதம் என்றால் குறள் மதம் என்று சொல்லுங்கள்''[137] என்று வேண்டுகோளும் விடுத்தார்; 1948 இல் திருக்குறள் மாநாட்டை நடத்தினார். இவரைப் போலவே திராவிட முன்னேற்றக் கழகத்தினரும் திருவள்ளுவருக்குச் சிலையும், கோட்டமும் நிறுவியதோடு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தைத் தோற்றுவித்து ஒவ்வொரு பேருந்திலும் ஒவ்வொரு திருக்குறளை எழுதுவித்துச் சிறப்பித்தனர். சுருங்கக்கூறின் திருக்குறளால் திராவிட இயக்கமும், திராவிட இயக்கத்தால் திருக்குறளும் பெருமை பெற்றன; புகழ் எய்தின. இவ்வாறு திருக்குறளைப் பொது மக்கள் மத்தியில் கொண்டு வந்து நிறுத்திய இவ்வியக்கத்தார் புனை கதை இலக்கியத் துறையிலும் அதன் சிறப்பைப் போற்றி எழுதுவதை ஓர் உத்தியாகக் கொண்டனர். கே. ஏ. மதியழகனின் 'காவா நா'வின் வடிவேலு 'நாகாக்க காவாக்கால்' என்று குறள் படித்திருக்கிறான். ''வெளுத்ததெல்லாம் பாலில்' வரும் வித்யாசாகரனைத் தலைமையாசிரியர்

சிவக் கொழுந்து முதலியார் ஒரு கடிதத்தின் பொருட்டுச் சினந்து வினவுகின்ற போது கீழ்க் கண்ட உரையாடல் இடம் பெறுகிறது.

> ''என்னை நம்புங்கள்; எனக்கு ஒன்றும் தெரியாது !''
> ''நம்புகிறேன் ! நீ செய்ய வில்லையென்றால் இந்த சாமிப் படங்களின் முன் சத்தியம் செய், விட்டு விடுகிறேன் என்றார் சிவக்கொழுந்து முதலியார்.
> ''சத்தியத்திலே எனக்கு நம்பிக்கையில்லை உண்மை யாக நான் சொல்கிறேன்; எனக்கும் இதற்கும் சம்பந்தமில்லை !''
> ''பின் ஏன் தயங்குகிறாய்? சத்தியம் செய்து விடு!''
> ''நான் இந்தப் படங்களைப் பகவான் என்று நம்புவ தில்லை!'' இக்கட்டான நிலை - அவன் நிறுத்த, பட்டிருக்கும் பேராபத்தான சூழ்நிலையை அவன் உணரவில்லை. அவனது பகுத்தறிவுக் கொள்கைக்கு முதல் அறைகூவல் கிடைத்தது.
> ''**திருக்குறளின்** மீது வேண்டுமானால் உறுதியிட்டுச் சொல்கிறேன்.''
> சிவக்கொழுந்து முதலியாரின் காதில் அவை விழுந்த தாகத் தெரியவில்லை.

கா. வேழவேந்தனின் 'இலந்தையும் எட்டியும்' கதையில் தாமரை, குமாரிடம் குறளின் பெருமையை எடுத்துச் சொல்கிறான். இதேபோல் தி. மு. க, வினர் பழந்தமிழ் இலக்கியங்களையும் திராவிட இயக்கப் படைப்பாளர்களின் பாடல்களையும் நூல்களையும் தமது கதைகளினிடையே மேற்கோள்களாகப் பயன்படுத்துவதை ஓர் உத்தியாகக் கொண்டனர். தில்லை வில்லாளனின் **மழலைச்செல்வத்தில்** (1971) அகநானூற்றுப் பாடல்களும், பி. சி. கணேசனின் 'மூன்றாவது பொங்க'லில் பாரதிதாசனின் **பாண்டியன் பரிசும்**, ஏ வி. பி. ஆசைத்தம்பியின் **தந்தையின் ஆணையில்** (டாக்டர் - 1959) சி. என். அண்ணாதுரையின் **நல்லதீர்ப்பும்** எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

தி.மு.க.வினது இயக்க வளர்ச்சியின் காரணமாய்த் தமிழ் நாட்டில் வாசகர் தொகையும் சிறுகதை வளர்ச்சியில் புதிய பண்புகளும் ஏற்பட்டதாகக் கூறுவது[138] நாவல் இலக்கிய வளர்ச்சிக்கும் பொருந்தும். சாதிமதக் கண்டிப்பு, மூட நம்பிக்கை எதிர்ப்பு, பகுத்தறிவுச் சிந்தனை போன்றவை நாத்திகச் சீர்திருத்தவாதம் எனப்படும். தமிழ்ப் புனைகதையின்

வரலாற்றில் திராவிட இயக்கத்தினாலேயே இத்தகைய புதிய கொள்கைகள் பாடுபொருள்கள் ஆயின. மூடநம்பிக்கையினால் பெண்குலம் பாதிப்பிற்குள்ளாவதைச் சி. என். அண்ணாதுரையின் **ரங்கோன் ராதாவும்** (1950), பகுத்தறிவுச் சிந்தனையினால் பெண்ணினம் காப்பாற்றப்படுவதைப் **பார்வதி பி. ஏ. யும்** (1953) சித்திரிக்கின்றன. மு. கருணாநிதியின் **சுருளிமலை** (1968) மூடநம்பிக்கையைப் பகுத்தறிவுச் சிந்தனை வெற்றிக்கொள்வதையும், **வெள்ளிக்கிழமை** (1969) நாள்கோள்களில் நம்பிக்கை வைத்துச் சமுதாயம் சீர்குலைவதையும் காட்டுகின்றன. கடவுள் மறுப்பையும், புராண எதிர்ப்பையும், பார்ப்பனர் சூழ்ச்சியையும் பாடுபொருளாள்களாகக் கொண்டவற்றிற்குச் சி. என். அண்ணாத்துரையின், 'கருப்பண்ணசாமி யோசிக்கிறார்', 'சொர்க்கத்தில் நரகம்', 'தஞ்சை வீழ்ச்சி', மு. கருணாநிதியின் 'நளாயினி', தில்லை வில்லாளனின் 'ஆண்டவன் துணை' போன்ற சிறுகதைகதைக் கூறலாம். இராம அரங்கண்ணிலின் கடிகாரம் (1956) பார்ப்பனர் சூழ்ச்சியை மையமாகக் கொண்டது. மேலும், இவர்தம் படைப்புகளில் திராவிட இயக்கத்தினரின் போராட்டங்களும், நிகழ்ச்சிகளும் கூட எடுத்தாளப் பெற்றுள்ளன. மு. கருணாநிதியின் 'சந்தனக் கிண்ணம்' இந்தி எதிர்ப்பையும், ஏ வி. பி. ஆசைத்தம்பியின் **தந்தையின் ஆணை** வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கொள்கையையும், பண்ணனின் **கோயில் என்ன செய்யும்?** (1979) பெரியாரின் பிள்ளையார் சிலை உடைப்பையும் கருப்பொருள்களாகவோ, கருப்பொருள்களுக்குத், துணைப் பொருள்களாகவோ கொண்டிருக்கின்றன. இன்னும் சொன்னால், பெரியாரின் சுயமரியாதை இயக்கம் அல்லது பகுத்தறிவியக்கம் பரவியதன் பயனாக, முப்பதுகளில் கிரிஜாதேவியின் **மோகனரஞ்சனி அல்லது சமூகத்தோற்றம்** (1931), மூவலூர் ஆ. ராமாமிர்தத்தம்மாளின் **தாசிகள் மோக வலை அல்லது மதிபெற்ற மைனர்** (1936) போன்ற நாவல்களும் சிறுகதைகளும் பல வெளிவந்தன. வேதியர் (**குமரிக்கோட்டம்** - 1946) சோதிடர் ('பலாபலன்') பூசாரி (**கலிங்க ராணி** - 1954), மந்திரவாதி (**'மூன்று கடிதங்கள்'**) மடாதிபதி (**'கடைசிக்கனவு'**) துறவி (**கபோதி புரக்காதல்**-1940), பகுத்தறிவுவாதி (**கசந்த கரும்பு**) போன்றவர்கள் இவர்களுடைய படைப்புக்களில் கதை மாந்தர்களாகப் படைக்கப் பெற்றனர். இயற்கைப் பொருள்களும், புலவர்கள் மன்னர்கள், இலக்கிய மாந்தர்கள் ஆகியோரின் பெயர்களும் தனித்தமிழ்ச் சொற்களும், இவர்தம் கதை மாந்தர்களின் பெயர்கள் ஆயின. மலர்க்கொடி ('சிங்களச் சீமாட்டி) குமுதம் ('பெரிய இடத்துப் பெண்'), அன்னம்

('பிணை வாழ்வு'), மான்கொம்பு (சூஞ்ரத்தின் கதை'), இளங்கோ ('இலட்சிய மனைவி') இளஞ்சேரன் (கோயில் என்ன செய்யும்?), மாதவி (சுமங்கலி), மனோன்மணி (மலர்ச்சியும் வளர்ச்சியும்) மதிவாணன் (நிலவில் பூத்த நெருப்பு-1987), எழிலன் (பிள்ளைக் கனியமுது') தேன்மொழி (தேன்மொழி-1978) போன்றவை சான்று காட்டத்தக்கன

> தி. மு. க. இயக்கத்தைச் சேர்ந்தோராகவும், ஆதரித்தோராகவும் இருந்த பல எழுத்தாளர்கள் பெண் அழகு, காதல் ஆகியவற்றைத் தமது கொள்கைகளுடன் சேர்த்துக் கூறுவதை ஒரு முக்கிய அம்சமாகக் காணலாம். அரசியல் வாதியிலிருந்து ஆக்க இலக்கியக்காரர் வரை இத்தன்மை தி. மு. க வினரிடம் முக்கியமாகக் காணப்படுகிறது... ஜனரஞ்சகம் கருதி இத்தகைய உத்தியைத் தி. மு. க. எழுத்தாளர்கள் கையாண்டிருக்கலாம், என்று கூறத் தோன்றுகிறது.[139]

என்பர். இக்கூற்று ஏற்கக் கூடியதே. இதற்குக் காரணம், இவர்கள் அரசியல்வாதிகளாகவும் இலக்கியவாதிகளாகவும் இருந்ததோடு மட்டுமல்லாமல் அழகியல்வாதிகளாகவும் (aestheticians) விளங்கினர் என்பதே ஆகும். ப. புகழேந்தியின் 'உறவு' என்னும் சிறுகதையில் வரும் மீனாட்சிக்கு அன்று முதலிரவு. அதனால் அவள் பெண்மைக்கே உரித்தான பண்புகளோடு ஒரு கையில் பலகாரத் தட்டையும் இன்னொரு கையில் பால் குவளையையும் கொண்டு நாணிக் கோணி அறைக்குள் நுழைந்தாள். இத்துடன் நிறுத்திக் கொண்டு கதையின் அடுத்த கட்டத்திற்குப் போகாமல் கதையாசிரியர் அவளின் அழகை வருணிக்கத் தொடங்குகின்றார்:

> செக்கர் வானத்தைப் போலச் சிவந்திட்ட உதடுகளும் அந்த உதடுகளைப் போட்டிக்கு அழைக்கும் கன்னங்களும், பட்டுத் தெறிக்கும் தூண்டில் விழிகளும், பார்ப்போரை வசீகரிக்கும் பல் வரிசையும் ... முழு நிலவாக, வெளியில் பவனி வந்து கொண்டிருக்கும் நிலாவுக்குப் போட்டி நிலாவாக அறைக்குள் அடியெடுத்து வைத்தாள் அவள்.

இப்படிப் பல சான்றுகளை எடுத்துக் காட்டலாம். பெண் விடுதலையைக் கொள்கையாக உடைய இவர்கள் பெண்ணழகை விரும்பிப் போற்றவும் செய்தனர் என்று கூறலாம்.

காதலும் வீரமும் தமிழர்களின் பண்பாடுகளும் பாடுபொருள்கள் ஆகும். தமிழ் மனம், தமிழ்மொழி, தமிழ் நாடு,

ஆகியவற்றின் மேன்மைக்குப் போராடிய திராவிட இயக்கத்தினர் காதலைப் போற்றியதில் வியப்பில்லை. ஏ. வி. பி. ஆசைத்தம்பி யின் 'திருச்செந்தூர் முருகன்,' கே. வி. சுப்பையாவின் 'பூஞ்சிட்டு,' டி. கே சீனிவாசனின் 'தேவைப்படாதவன்,' பி. சி. கணேசனின் 'தேவை,' இராம. அரங்கண்ணலின் 'உலகம் யாருக்கு ?' எஸ். எஸ். தென்னரசுவின் 'முத்தாயி' போன்ற சிறுகதைகள் காதலை முன் நிறுத்தித் திராவிட இயக்கக் கொள்கைகளை வெளிப்படுத்துகின்றன. கபோதிபுரக் காதல், மு. கருணாநிதியின் 'கங்கையின் காதல்,' 'கண்டதும் காதல் ஒழிக,' பி. சி. கணேசனின் 'கலையும் காதலும்,' 'நிர்மலாவின் காதல்,' தமிழ் ஒளியின் 'காதலுக்கு எதிரே', 'காதல் வென்றது,' கே. ஏ. மதியழகனின் 'மார்க்ரெட் காதல்' போன்றவை 'காதல்' என்னும் சொல்லைப் பெற்றிருப்பதுடன் காதல் நிலையையும் ஆராய்வதாக உள்ளன.

முரசொலி மாறனின் 'வால் நட்சத்திரம்' என்னும் கதையின் தொடக்கம் இவ்வியக்கத்தினரின் காதல் பற்றிய கருத்தினைப் புலப்படுத்துவதாக இருப்பதால் இங்கு அது எடுத்துக் காட்டப் படுகிறது.

> காதல் வராத கதைகள் என்னவோ சோபிப்பதே இல்லை. காட்டுப் பாதையிலே - கானல் வெளியிலே நடந்து செல்பவர்களுக்கு, தூரத்திலே தெரியும் நகர்வளம் எவ்வளவு சுறுசுறுப்பை - கால்களுக்கு ஒரு வேகத்தைத் தருகிறது! அதைப் போலத்தான் வாழ்க்கைப் புத்தகத்தின் வர்ணம் கலைந்த ஏடு களைப் புரட்டுபவர்கள் கதாபாத்திரங்களின் காதல் லீலைகளிலே ஒரு ஆதரவைக் காண்கிறார்கள். எனக்கும் அன்றைய மாலைப் பொழுது காதல் இல்லாத கதையைப் போல்தான் இருந்தது; சுவை இல்லை!

குறிப்புகள்

129. டாக்டர். இரா. சேது, **அண்ணாவின் கதை இலக்கியம்,** ப. 35.

130. சி. சிட்டி பாபு (தொ. ஆ.) **தி. மு. க. வரலாறு,** ப. 49.

131 1) சுயமரியாதை இயக்கத்தினர் தங்களது கொள்கை களைப் பரப்ப கதைகளையும் கட்டுரைகளையும்

எழுதினர். அவர்களுள் அண்ணாத்துரை. கருணாநிதி, டி. கே. சீனிவாசன், தில்லை வில்லாளன் முதலியோர் முக்கியமானவர்கள். இவர்கள் எல்லோருமே சிறுகதையை ஒரு கலையாகக் கருதாமல் ஒரு பிரச்சாரக் கருவியாகவே கருதிப் பயன்படுத்தினார்கள். சிறுகதையின் வடிவம், உத்தி முதலியவைகளைப் பற்றிக் கவலைப்படாமல் வெறும் பிரச்சார நோக்கத்தையே முதன்மையாகக் கொண்டு எழுதினார்கள். தமிழ் நடையிலே ஓட்டம் இருந்தாலும், பொருத்தமான சொல்லை - உயிர்த்துடிப்புள்ள சொல்லைப் போடாமல் அலங்காரச் சொற்களாவே பக்கங்களை நிரப்பினர். இதனால் சிறுகதைக்குரிய வேகம் பல இடங்களில் தடைபட்டு விட்டது. மேலும் எதுகை மோனைகளும், அடுக்குச் சொற்களும் நடையை மலிவாக்கிவிட்டன. இந்தக் குறைகளால் எல்லாம் சுயமரியாதை இயக்க எழுத்தாளர்களின் எழுத்துக்கள் இலக்கியத்தரத்தை எட்டாமல் போய் விட்டன.

- ச செந்தில் நாதன் **தமிழ்ச்சிறுகதைகள் ஒரு மதிப்பீடு** பக் 75-76

2) .. ஈ. வே ராமசாமி நாயக்கரின் எதிர்ப்புக் குரல், நல்ல பாதிப்பைக் கலை இலக்கியக் கலாச்சார மட்டத்தில் தோற்றுவிக்கச் சக்தி பெற்றிருக்கவில்லை... இலக்கியத்தில் அவரது சீடர்களான சி. என். அண்ணாத்துரை, ஆசைத் தம்பி முதலியோரது படைப்புகளில் மேலோட்டமான பிரச்சார வாடையையும், பாமரமக்களைக் கவருவதற்கான மலிவான தந்திரங்களையும், தான்காணமுடிகிறது

— எம். வேத சகாயகுமார், **தமிழ்ச்சிறுகதை வரலாறு** ப. 69,

3) திராவிட இயக்கத்தாரின் சிறுகதையாயினும் சரி நெடுங்கதை யாயினும் சரி எல்லாமே கிட்டத்தட்ட வெளிப்படையான பிரச்சாரமே செய்தன. அதாவது அவற்றில் இலக்கியத் தன்மை மிகுவதற்குப் பதிலாக கட்டுரைத் தன்மை மிகுந்திருந்தன

– பொன்னீலன், **தற்கால தமிழ் இலக்கியமும், திராவிட இயக்கச்சித்தாந்தங்களும்** ப. 33

132. அசோகமித்திரன், என். ஆர். தாசன், **தமிழ்ச் சிறுகதைகளில் மூன்று பார்வைகள்**, பக் 123-24,

133. டாக்டர் வ. ஞானசுந்தரம், ஆர். பெரியாழ்வார், 'புதுமைத் தமிழ் இலக்கியத்தில் பேச்சுமொழி', புலமை, ஏப் 1875.

134. நா. வானமாமலை, **உரைநடை வளர்ச்சி**, ப 60.

135. **அண்ணாவின் கதை இலக்கியம்**, ப. 230.

136. **தற்காலத் தமிழ் இலக்கியமும் திராவிட இயக்கச் சித்தாந்தங்களும்**, ப. 49.

137. **பெரியார் சிந்தனைகள்** - தொகுதி 3, ப. 1462. மேற்கோளாக ஆளப்பெற்ற நூல் சே. இராசேந்திரன், **தமிழ்க் கவிதையில் திராவிட இயக்கத்தின் தாக்கம்** ப. 294

138. டாக்டர் கா. சிவத்தம்பி, **தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்**, ப 89.

139. சித்திரலேகா மௌனகுரு 'நவீன தமிழிலக்கியத்தில் அரசியற் கருத்துக்கள்', **தமிழ் ஆராய்ச்சியின் புதிய எல்லைகள்** ப. 77.

கஜபாகுவின் கால அடிப்படையில் சங்க காலம்: கால ஆராய்ச்சி-ஒரு மறுஆய்வு.

பூரண சந்திர ஜீவா, M. A., B. Ed.,
தமிழாசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி,
பாதிரிவேடு, மாதர்பாக்கம்,
செங்கற்பட்டு - 601 202.

1. சங்க காலத்தை நிறுவும் சான்றுகளை இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த அறிஞர். வீ. கனகசபையார் காலம் முதல் பல்வேறு அறிஞர்களும் ஆராய்ந்துள்ளனர். அவற்றுள் ஒன்று இலங்கை மன்னன் கஜபாகு I, சேரமன்னன் செங்குட்டுவன் எடுத்த பத்தினி விழாவிற்கு வந்திருந்தான் என்ற சிலப்பதிகார மரபின் அடிப்படையில் பெறப்பட்டதாகும். இதன் உண்மையினைச் சில வரலாற்று ஆதாரங்களின் அடிப்படையில் மறுஆய்வு செய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

2. "சிலப்பதிகாரத்தின் கதை சங்க காலத்தில் நிகழ்வதாக அந்நூல் வாயிலாக அறிகிறோம். ஆனால் கதை நிகழ்ந்த காலத்துக்கும் இலக்கிய வடிவம் பெற்ற காலத்துக்கும் இடையே பெரிய இடைவெளி இருப்பதை உணர்கிறோம். இந்நிலையில் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்ததாக அறியப்படும் ஒரு சேரனையும் ஒரு அயல் நாட்டு மன்னனையும் இணைத்து நினைவு கூறும் மரபினைச் சிலம்பில் காண்கிறோம்.

2:1: கயவாகு என்று சிலம்பில் குறிக்கப்படும் கஜபாகு மன்னனைப் பற்றி இரு இடங்களில் செய்திகள் உள்ளன. 'கண்ணகியைப் பற்றி அறிந்து, தன் நாட்டில் ஆடித்திங்களில் வேள் விழாவெடுக்க நாடு வளம் பெற்றது' என்று உரை பெறு கட்டுரையில் உள்ளது. வரம் பெறும் அரசர்கள் வரிசையில் குடகக் கொங்கர், மாளுவமன்னர் இவர்களோடு இலங்கை வேந்தனாகிய கஜபாகுவும் வரம் பெறு காதையில் குறிக்கப்படுகிறான். இவன் தந்தை வங்க நாசிக தீசன் (கி. பி. 110 - 113) என்பவன். கஜபாகு காலச் சேரமன்னன் பதிற்றுப்பத்தில் பரணர் பாடிய கடலோட்டிய வேல்கெழு குட்டுவன் என்று இயைபுபடுத்தி இவன் கால அடிப்படையில் (கி பி. 113-135) சங்க காலத்தை அமைப்பர். இக்காலத் தொடர்பு உண்மையானதா என்று அறிய சிலப்பதிகாரம் காட்டும் மன்னர் வழியினை ஆராய வேண்டும்.

3. சிலம்பின் முதல் இரண்டு காண்டங்களில் காணப்படும் வரலாற்று முறைக்கும் வஞ்சிக் காண்ட வரலாற்று முறைக்கும்

இடையே இயைபு ஏதும் காணக்கூடவில்லை. புகார்க் காண்டத்தில் கரிகாலன் சோழர்குல முன்னோனாகக் குறிக்கப்படுகின்றான். அடுத்து, மதுரைக் காண்டத்தில்தான் வரலாற்று முறை விளக்கம் பெறுகின்றது. பாண்டியர்களின் நீதிமுறையை விளக்க மதுராபதித் தெய்வம் கண்ணகியிடம் பொற்கைப் பாண்டியன் கதையைக்கூறியது. அடுத்து, பராசரன்-வார்த்திகன் கதையைக் கூறி பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனின் நீதி முறையைக் கூறியது. (கட்டுரைக்காதை). பராசரன் என்ற பார்ப்பனன், சேரமன்னன் பல்யானைச் செல்கெழு குட்டுவன் பாலைக் கவுதமனுக்கு வானுறை வழங்கியக் கொடைத்திறம் கேட்டு அவனைக் காணச் சென்றான். சேரநாடு சென்று, பரிசில் பலவும் பெற்றுத் திரும்பும் வழியில் தங்கால் என்ற ஊரிலுள்ள போதிமன்றத்தில் தங்கி இளைப்பாறும்போது,

'... ... ... காவல் வெண்குடை
விளைந்துமுதிர் கொற்றத்து விறலோன் வாழி
பூந்தண் பொருநைப் பொறையன் வாழி
மாந்தரஞ் சேரல் மன்னவன் வாழ்கென!

(வரிகள் : 79-84) வாழ்த்தி இருந்ததாக ஆசிரியர் கூறுகின்றார். பின், பராசரன் தந்த பொருட்களால் வார்த்திகன் வளமாக வாழக் கண்ட பாண்டியனது காவலர்கள் ஐயுற்றுச் சிறைபடுத்த அவ்வூர் கோயிற் கதவுகள் அடைபட்டன. உண்மையை அறிந்த பாண்டியன் வார்த்திகனை விடுவித்து நீதி வழங்கினான். அந்த பாண்டியனைக்குறித்து மதுராபதித் தெய்வம்,

'கோன்முறை யறைந்த கொற்ற வேந்தன்
தான்முறை பிழைத்த தகுதியும் கேள்நீ'

(வரிகள் : 131-132) என்று கூறுகின்றது. கோன் முறை செய்த மன்னனே (தான்) கண்ணகிக்கு முறை பிழைத்தான் என்று கூறுவது இவ்வாறு முறை பிழைத்தவன் பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்பதை உணர்த்துகிறது.

3 : 1 : கண்ணகிக்கு முறைபிழைத்த பாண்டியன் நெடுஞ்செழியன் காலத்தில் சேரநாட்டில் பல்யானைச் செல்கெழு குட்டுவன் வாழ்ந்தான் என்பதை மதுராபதி தெய்வத்தின் வாயிலாக அறியலாம். மதுரை அழிவதற்குச் சிறிது காலம் முன்பு இந்த நிகழ்ச்சி நடைபெற்று இருக்க வேண்டும். இதன்படி சேரர் அரசமுறை வருமாறு :-

1. பல்யானைச் செல்கெழுகுட்டுவன்.
2. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்.
3. மாந்தரஞ் சேரல் இரும்பொறை.

பதிற்றுப்பத்தின் வாயிலாக நெடுஞ்சேரலாதனின் தம்பி இந்தப் பல்யானைக் குட்டுவன் என்றும், அவனுக்குப் பிறகு சேர நாட்டை ஆண்டவன் என்றும் அறிகிறேம். இக்குட்டுவன், காலத்திலும், அவனுக்குப் பின்னரும் நெடுஞ்செழியன் ஆண்டிருக்க வேண்டும்.

3 : 2 : சிலப்பதிகார அரசர்கள் சங்க காலத்தினர் என்பதில் ஐயமில்லை ஆயினும், சங்க காலத்தின் எப்பகுதிக்கு உரியவர் என்ற கேள்வி எழுகிறது. சங்க இலக்கியங்களை ஆராய்ந்து பார்த்தால், இம்மன்னர்கள் அனைவரின் காலத்திலும் வாழ்ந்து அவர்களைப் பாடிய பட்டியை ஒப்புநோக்கி, மாமூலனாரே இவர்களைப்பற்றிய ஆய்விற்கு ஏற்புடையவர் என்று கூறலாம். இவர், உதியஞ் சேரலாதன், பெருஞ்சேரலாதன், நெடுஞ்சேரலாதன், பல்யானைக்குட்டுவன் போன்ற சேர மன்னர்களையும், கரிகாலன், பெருவிறற்கிள்ளி போன்ற சோழ மன்னர்களையும் வடநாட்டு மன்னர்களான நந்தர், மௌரியர் (மோரியர்) போன்றவர்களையும் பாடியுள்ளார். தென்னிந்திய - வட இந்திய மன்னர்களைப் பாடியதால் இவர் வரலாற்று ஒப்பாய்விற்குப் பெருந்துணை புரிந்துள்ளார். சேர மன்னரில் தொடர்ச்சியாக ஆண்ட மன்னர் நால்வரைப் பாடியுள்ளார். இனி, இவர் பாடியச் சேர மன்னர்களைப் பார்ப்போம்,

3:3 : சேர மன்னருள் காலத்தால் முந்தியவன் என்று கருதப்படும் உதியஞ்சேரலாதனைப் பற்றி விரிவாகப் பாடியுள்ளார். அவனது பெருஞ்சோறு கொடுத்த செய்தியினையும், பெருஞ்செல்வத்தைத் துறந்த சிறப்பினையும் பாடியுள்ளார். உதியஞ்சேரலாதனை,

'நாடுகண் அகற்றிய உதியஞ்சேரல்'
'துறக்க மெய்திய தொய்யா நல்லிசை'
முதியர்ப் பேணிய உதியஞ் சேரல்'

(அகநானூறு : 65,233) என்றும், கரிகாலனுடன் போரிட்டு வடக்கிருந்த பெருஞ்சேரலாதனை,

'கரிகால் வளவனொடு வெண்ணிப் பறந்தலைப்
பொருதுபுண் நாணிய சேரலாதன்
அழிகள மருங்கின் வாள்வடக் கிருந்தென'

(அகம் : 55) என்றும் பாடியுள்ளார். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனை அவனது வடதிசை வெற்றிகளுக்காகச் சிறப்பித்துப் பாடுகிறார்.

'வலம்படு முரசிற் சேரலாதன்
மின்நீ ரோட்டிக் கடம்பறுத் திமயத்து
முன்னோர் மருள வணங்குவிற் பொறித்து'

(அகம் : 127) என்று பாடுகிறார், அடுத்து குட்டுவன் என்ற ஒரு சேரனைப் பாடியுள்ளார்,

'விசிபிணி முழுவிற் குட்டுவன் காப்பப்
பசியென அறியாப் பணைபயி லிருக்கைத்
தடமருப் பெருமை தாமரை முனையின்
குடமுதிர்ப் பலவின் கொழுநிழல் வதியுங்
குடநாடு பெறினுந் தவிரலர்'

(அகம் : 91) என்று இவனது குடநாட்டின் வளத்தைப் புகழ்ந்துரைக்கிறார். ஆயினும், இக்குட்டுவன் யாரென அறிய இயலவில்லை இவனையே வேறொரு பாடலில்,

' .... குட்டுவன்
அகப்பா அழிய நூறிச் செம்பியன்
பகற்றீ வேட்ட ஞாட்பினும்'

(நற்றிணை : 14) என, இக்குட்டுவனது அகப்பா என்ற அரணை வென்று சோழன் அழித்த செய்தியைக் கூறுகிறார். சேர மன்னருள் அகப்பா என்ற அரணை வென்று கொண்டிருந்தவன் பல்யானைச் செல்கெழு குட்டுவனேயாவான். பாலைக் கவுதமனார் பதிற்றுப்பத்தில் (3:2) இந்தச் செய்தியை

'அண்ணலம் பெருங்கோட் டகப்பா எறிந்த
பொன்புனை யுழிஞை வெல்போர்க் குட்டுவ'

என்று குறிப்பிடுகிறார். இதையே சிலப்பதிகார ஆசிரியரும் (நடுகற் காதை : வரிகள் 133 - 139),

'மிகப் பெருந் தானையோ டிருஞ்செரு வோட்டி
அகப்பா எறிந்த அருதிறந் லாயினும்'

என்கிறார். எனவே, அகப்பாவுக்குரிய சேரன் பல்யானைச் செல்கெழு குட்டுவனே என்றும், இவனிடமிருந்தே சோழன்

அதனை வென்று அழிந்திருக்க வேண்டும் என்றும் கருதலாம். எனவே, மாமூலனார் குட்டுவன் என்று குறித்தது இவனையே என்றும் கொள்ளலாம்.

3:4 : மேற்கண்ட பாடலில், 'குட்டுவன் காப்ப' என்று நிகழ் காலத்தில் கூறியதால், இப்பாடல் இக்குட்டுவனது ஆட்சிக் காலத்தில் பாடப்பட்டது என்று கருதலாம். இச் சேர மன்னருள் கடைசியில் ஆண்டவன் என்று நாமறியும் பல்யானைச் செல்கெழு குட்டுவனை இவர் பாடியிருத்தலால், மாமூலனார் இவன் காலம் வரை வாழ்ந்து மறைந்தவராதல் வேண்டும் ஒரு குலத்து மன்னருள் சிலரை ஒரு புலவர் பாடி இருக்கும் போது, அந்த மன்னருள் கடைசியாக வாழ்ந்ததாக நாமறிந்த மன்னனின் காலமே அப் புலவரின் காலம், அல்லது இறுதிக் காலம் என்று உறுதியாகக் கூறலாம். மேலும், அகப்பாவைச் சேரன் முதல் பத்து ஆண்டு களில் வென்று, அடுத்த பத்து ஆண்டுகளில் சோழனிடம் தோற்ற தாகக் கொண்டு, இப்புலவர் குட்டுவனின் 20 ஆவது ஆட்சியாண்டளவில் இந்தப் பாடலைப் பாடியதாகக் கொள்ள லாம். இதையே மாமூலனாரது இறுதிக் காலம் என்று கருதலாம். இதற்குமேல், அவர் வாழ்ந்திருப்பினும் நமது காலவரையறையில் பிழைபட வாய்ப்பு இல்லை.

4 : 0 மாமூலனாரது காலத்தைக் கணிக்க வேண்டியது இங்கு இன்றியமையாத ஒன்று. அதற்கு அவரது பாடல்கள் உதவுகின்றன. இவர் தமிழக மன்னர்களையும், வட இந்திய மன்னர்களையும் பாடியுள்ளார். இவரது பாடல்களை நன்கு ஆராய்ந்து ஒப்பீட்டு முறையில் பகுப்பாய்வு செய்தால் பெறப்படும் கருத்துக்களின் அடிப்படையில் இவரது காலத்தைக் கணிக்க 3 அடிப்படைகளை மனதில் கொள்ள வேண்டும்- அவையாவன, (1) மௌரியர் படையெடுப்பு முயற்சிகள் ஒழிந்து, படையினர் அமைத்த பாதைகளில் மக்கள் போக்குவரவும், அமைதி வாழ்வும் நிலவிய காலம். (2) தமிழக மன்னர்கள் மௌரிய மன்னர்களுக்கு எதிராக அமைத்த கூட்டிணைவு (Confederacy), அண்மை வட திசை வேற்றுமொழி நாடுகளை வென்று, மேலும் வடதிசை நோக்கிப்படையெடுக்கும் அச்சுறுத்தல் வடநாட்டில் காணப்பட்ட ஒரு காலம் (3) கலிங்கநாட்டு மன்னன் காரவேலன், தான் தமிழகத்தின் மீது படையெடுத்து பாண்டிய நாட்டை வென்றதாகக் குறிப்பிட்டுக் கொள்ளும் ஹதிகும்பா கல்வெட்டில் குறிக்கப்படும் மதுரைப் படையெடுப்பு இன்னும் நிகழாத காலம்,

இந்த அடிப்படையில் சில வரலாற்றுச் செய்திகள், கல்வெட்டுச் சான்றுகள் கொண்டு மாமூலனார் காலத்தை ஆராயலாம்.

4 : 1 : அசோகர் கி. மு 261 அளவில் நடைபெற்ற கலிங்கப் போருக்குப் பின்னர், போரை வெறுத்து அமைதி வழியில் அறப் பணிகளைத் தொடங்கினார். ஆயினும் அவர் தமது காலம், வரையிலும் தம் படையணிகளைக் கலைக்காமல் வைத்திருந்தார். உள் நாட்டு வெளிநாட்டுப் படையெழுட்சிகளைச் சமாளிப் பதற்காக அவ்வாறு செய்தார் என்பார் டாக்டர். ரொமிலா தாபர். தென்னிந்தியாவில் நிலவிய சிறப்புச் சூழ்நிலைகளினால் பேரரசு அப்பகுதியில் மிகுந்த கவனம் செலுத்தியது என்றும் தெரிகிறது. தெற்கு மாநிலத்தின் தலைநகராக இன்றைய கருநாடகாவில் உள்ள சுவர்ணகிரி விளங்கியது. இதன் ஆளுநர் ஆர்யபுத்திர (Aryaputra - கல்வெட்டில் ayaputa) எனப்பட்டார் (முதலாவது சிறிய கற்பாறை ஆணை, தெற்கத்திய (மைசூர்) பிரதி). ஆனால், மற்ற மூன்று மாநிலங்களின் ஆளுநர்களும் குமார (Kumara-கல்வெட்டில் Kumala) எனப்பட்டனர் (மூன்றாவது கற்பாறை ஆணை). அரசரது மிக நெருங்கிய உறவினரோ, பட்டத்து இளவரசரோதான் ஆர்யபுத்திரர் எனப்படுவர். கல்வெட்டில் சுவர்ணகிரி ஆளுநர் இவ்வாறு குறிப்பிடப்படுவது, அவர் குமாரர்களைவிட மிகுந்த உயர்தகுதியைப் பெற்றிருந்தமையைக் காட்டுகிறது[1]. இதனால், பேரரசு தென்னிந்தியாவின் மீது காட்டிய அக்கறையை உணரலாம். அசோகர் காலம்வரை மௌரியப் படையெடுப்பு அச்சுறுத்தல் நீடித்தது என்பது உறுதி.

4:2 : அசோகர் கி. மு. 232இல் மறைந்ததும் பேரரசு சிதைவுற்று ஆந்திர, கலிங்க, விதர்ப்பப் பகுதிகள் சுயாட்சி பெற்றன. தொடர்ந்து கி மு 230 அளவில் மேற்குத் தக்காணப் பகுதியில் சாதவாகன அரசு தோன்றியதுடன் மௌரியப் படையெடுப்பு அச்சுறுத்தல் நீங்கி தமிழகத்தில் அமைதி திரும்பியது. காலம் செல்லச் செல்ல, மௌரியப் படைவரவிற்-காக அமைக்கப்பட்ட படைவழிகளை மக்கள்போக்கு வரவிற்குப் பயன்படுத்தினர். வடக்குத் தெற்குத் தொடர்புகள் மிகுதியாயின.

'மாகெழு தானை வம்ப மோரியர்
புனைதேர் நேமி யுருளிய குறைத்த
இலங்குவெள் ளருவிய அறைவா யும்பர்

1. Bongard-Levin . G. M , Mauryan India, 1985, p. 276.

....
நிரம்பா நீளிடைப் போகி'
'முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்
தென்திசை மாதிர முன்னிய வரவிற்கு
விண்ணுற ஓங்கிய பனியிருங் குறைத்து
ஒண்கதிர்த் திகிரி யுருளிய குன்றத்த,
அறையிறந் தவரோ சென்றனர்'

(அகம் : 251, 281) என்று மாமூலனார் இக்காலச் சூழ்நிலையை நமக்கு எடுத்துரைக்கிறார். மௌரியப்பேரரசு கி.மு. 188 அளவில் மறைந்தது. அதுவரையிலும்கூட சாதவாகனர் கவனம் தெற்கில் திரும்பவில்லை. தமிழகத்திற்கு வடக்கே இருந்த எருமைநாடு (மைசூர்) (அகம் 15,) வடுகர் (அகம் 295), புல்லிநாடு (அகம் 61) பாணர் (Banas) (அகம் 325), கட்டிநாடு (குறுந்தொகை 11) போன்றவற்றைக் குறிப்பிடும் மாமூலனார் சாதவாகனரைப்பற்றிக் குறிப்பிடவில்லை. இதனால், சாதவாகன அரசு தமிழகத்துக்கு அண்மையில் இல்லை எனவும், அவர் காலத்தில் சாதவாகனர் வலிமையும், புகழும் பெறவில்லை என்றும் உணரலாம். எனவே, மாமூலனார் மௌரியப் படையெடுப்பைப் பற்றிப் பாடியுள்ள குறிப்புகளைக் கொண்டு அவரது பாடல்கள் கி மு. 230 க்கு பின்னரே பாடப்பட்டனவாகக் கொள்ளலாம். இக்காலமே, அவரது பாடல்களின் மேலெல்லை எனலாம்.

4:3: மௌரியப் பேரரசு மறைந்ததும் வடதிசையில் இருந்து வந்த நெடுநாளைய போர் அச்சுறுத்தல் ஒருவாறு நீங்கியது. சாதவாகனரோ தெற்கே கவனம் கொள்ளவில்லை. வடதிசையில் அவர்களுக்கிருந்த நிலையை ஒப்பிட்டுப் பார்த்தால் தமிழரசர்களது நட்பினையே அவர்கள் தெற்கில் நாடியிருக்கவேண்டும். சிலப்பதிகாரம் காட்டும் செங்குட்டுவன் சதகர்ணி நட்பு இதை வலியுறுத்துகின்றது. வடக்கே இப்படி ஒரு நிச்சயமற்ற நிலைமையை உணர்ந்த தமிழ் அரசர்கள் தங்கள் நிலையை வலுப்படுத்திக் கொள்ளும் முயற்சிகளில் ஈடுபட்டனர் என்று மாமூலனார் பாடல்கள் காட்டுகின்றன. வடதிசை நோக்கிப் படையெடுத்தனர். தமிழகத்துக்கு அண்மையில் இருந்த வடதிசை நாடுகளை வென்று தங்கள் ஆட்சிக்குட்படுத்தினர். மாமூலனார் பாடல் இதைத் தெளிவாகக் கூறுகிறது (அகம் 31),

'... ... ... வென்றியொடு
வில்லலைத் துண்ணும் வல்லான் வாழ்க்கைத்

தமிழ்கெழு மூவர் காக்கும்
மொழிபெயர் தேஎத்த பன்மலை யிறந்தே'

என்கிறார். 'வெற்றியுடன் தமிழக மூவேந்தரும் (வென்று) பாதுகாக்கும் (வடதிசையிலுள்ள) மொழிமாறுபட்ட தேசங்களின் பலமலைகளையும் கடந்து' என்பது பொருள். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், கரிகாலன் போன்றோரது வடதிசை வெற்றிகளைப்பற்றிய சங்க இலக்கியப் பாடற் கருத்துக்களை இங்கே ஒப்பிடுக. இச்செய்திகள் யாவும் அகச்சான்றுகளே, இவற்றை உறுதிப்படுத்தும் நம்பகமான புறச்சான்றுகள் உள்ளனவா என்ற கேள்வி எழுதல் இயற்கை. மாமூலனாரது கருத்துக்களை உறுதிப்படுத்தும் சான்றுகள் உள்ளன. அதனை இங்கு விரிவாகக் காண்போம்.

4; 4 : வடக்கே கலிங்க நாட்டின் அரசனாக கி. மு. 185இல் காரவேலன் பட்டம் எய்தினான். கி.மு. 172இல் தனது 13ஆவது ஆட்சியாண்டில் அவன் வெளியிட்ட ஹதிகும்பா கல்வெட்டில், தான் தமிழகம் சென்று பாண்டிய மன்னனை வென்று பெரும் பொருளைக் கைப்பற்றியதாகக் கூறுகிறான். கி. மு. 174இல் நடைபெற்ற அப்படையெடுப்பிற்கு அவன் கூறும் காரணம் ஆய்வுக்குரியது. கல்வெட்டுப்பகுதி (பிராகிருதத்தில்) வருமாறு:

L. No: 11 : janapata-bhavanam-cha terasa vasa sata katam bhimdati Tamira-daha Samghatam (.)[2].

L.No. 11: ...and, for the well being of (his) Yealem, breaks the Confederacy of Tamil Countries (which had been) formed in the year 113.

வ. எண். : 11 : மேலும், தன் ஆட்சியுரிமையின் நலன் கருதி, 113 ஆண்டில் தமிழக நாடுகளால் உருவாக்கப்பட்ட கூட்டிணைவை உடைக்கிறான்.

இத்தமிழரசர்களின் கூட்டிணைவு கி.மு.298இல் மௌரியமன்னன் பிந்துசாரன் காலத்தில் அவனது படையெடுப்பிற்கு எதிராக அமைக்கப்பட்டது. அது காரவேலன் காலம்வரை நீடித்தது. கல்வெட்டு உணர்த்தும் செய்திகள் (1) காரவேலன் பட்டம் ஏற்பதற்கு 113 ஆண்டுகளுக்கு முன்பு தமிழரசர்கள் கூட்டிணைவு தோன்றியது. (2) அவன் பட்டம் ஏற்கும்போது அந்தக் கூட்டிணைவு கலிங்க நாட்டின் ஆதிபத்திய உரிமைக்கே

2. Dr. ShashiKant, kharavela and Asoka, 1971, p. 90.

ஒரு அச்சுறுத்தலாக விளங்கியது. எனவே, கலிங்கத்தின் நலன் கருதி அதனை உடைக்க வேண்டியதாயிற்று. இச்செய்திகளால் தமிழரசர் வடநாட்டின் மீது குறிப்பாக அவனது கலிங்க நாட்டின் மீது படையெடுக்கும் நிலை இருந்தது என்று உறுதியாகிறது. இதனை, மாமூலனாரின் 'தமிழ்கெழு மூவர் காக்கும்' என்ற பாடலடியால் அறியலாம். மேலும், தமிழரசர் வடதிசை தேசங்களை வென்று பாதுகாத்ததுடன், அதற்கு அப்பாலும் தங்கள் வெற்றிகளை விரிவாக்க முயன்றனர் என்பதை மாமூலனார் பாடல், காரவேலன் கல்வெட்டு இரண்டையும் கொண்டு உறுதிப்படுத்திக்கொள்ளலாம். மாமூலனார் பாடல்கள் வெறும் இலக்கியமல்ல, வரலாற்றுப் பதிவு என்பதையும் நாம் உணரவேண்டும். தமிழரசர் வடதிசைப் படையெடுப்பு பற்றி கேலி பேசுவோர் இதனை அறிய வேண்டும்.

4 : 5 : மேற்கண்ட செய்திகளைக் கொண்டு கி. மு. 174இல் நடைபெற்ற காரவேலனின் மதுரைப் படையெடுப்பிற்கு முற்பட்ட கி. மு. 185இல் அவன் பட்டமேற்றபோது அவனது கலிங்க நாடு தமிழரசர்களது அச்சுறுத்தலுக்கு ஆளாகி இருந்த ஒரு காலச் சூழலில், கி. மு. 230க்கும் கி. மு. 185க்கும் இடைப்பட்ட ஒரு காலத்தில் மாமூலனாரது பாடல்கள் பாடப்பட்டிருக்க வேண்டும். இந்த இடைக்காலம் 45 ஆண்டுகள் என்பதை முழுமைப் படுத்தி, அரை நூற்றாண்டுக் காலமாகக் கொண்டால் இவரது பாடல்களின் காலக் கீழெல்லை கி. மு. 180 எனலாம். இவரது பிறப்பு இறப்புக் காலங்களை உறுதிப்படுத்த இயலாது போயினும், பாடல்கள் தோன்றிடக் காரணமான காலச் சூழ்நிலை இந்த 50 ஆண்டுகள் என்று ஏற்பதில் தவறில்லை. நாம் முன்பே பார்த்தபடி பல்யானைக் குட்டுவனின் அகப்பா தோல்விக் காலமான அவனது 20ஆவது ஆட்சியாண்டும், மாமூலனாரது காலக் கீழெல்லையான கி. மு. 180ம் சமம் என்று கொள்ளலாம் இவன் 25 யாண்டுகள் ஆண்டான். 20ஆவது ஆட்சியாண்டு = கி. மு. 180. 25 = கி. மு. 175. இதன் அடிப்படையில் சேரமன்னர் காலம்.

1. பல்யானைக் குட்டுவன் = கி. மு. 200 – 175.

2. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் = கி. மு. 258 – 200.

5 : கஜபாகுவைப்பற்றியும் அவனது தமிழகத் தொடர்பினைப் பற்றியும் இங்கு ஆராய்தல் நலம். கஜபாகு காலம் கி. பி. 113-135, இவன் தந்தை வங்க நாசிக தீசன்

கி. பி. 110-113. இவன் காலத் தமிழர் படையெடுப்பையும் - சங்க காலத்தையும் இணைத்து சில அறிஞர்கள் ஆராய்ந்துள்ளனர். கடலோட்டிய வேல்கெழு குட்டுவன் கஜபாகு காலத்தவன். இவன் தந்தை காலத்தில் வாழ்ந்து இலங்கை மீது படையெடுத்தவன் கரிகாலன். அதாவது கரிகாலன் இலங்கையை வென்றதாக பிற்கால நூல்கள் கூறுகின்றன. தீசன் காலத்தில் தமிழர் படையெடுத்து வென்றனர். எனவே, இவன் காலத்தில் படையெடுத்தவன் கரிகாலனே. இவ்வாறு, கஜபாகுவின் கால அடிப்படையில் தமிழக வரலாற்றுக் காலத்தை அமைத்துள்ளனர்[3]. இதனை ஆராய்தல் நலம்பயக்கும்.

5: 1 : செங்குட்டுவனின் நண்பனாக கஜபாகு தமிழகம் வந்தான் என சிலப்பதிகாரம் கூறுகிறது. ஆனால், இராசவழியம் போன்ற நூல்கள் அவன் தன் தந்தையின் காலத்தில் நடந்த படையெடுப்பிற்குப் பழி தீர்ப்பதற்காகவே தமிழகம் வந்தான் என்று கூறுகின்றன. இரவு நேரத்தில் நகர்சோதனை வந்த கஜபாகு தன் தந்தையின் காலப் படையெடுப்பின் துன்பங்களை ஒரு பெண்ணின் வாயிலாக அறிகிறான். எனவே, படையெடுத்த நாட்டை நோக்கிப் புறப்படுகிறான். கஜபாகு தன் படைகளை நீக்கிவிட்டு, நீலன் என்னும் அரக்கன் துணையுடன் கடலைப் பிளந்து சென்று சோலி நாட்டினை அடைந்து, அந்நாட்டு அரசன் அஞ்சுமாறு அவனது அரியணையில் அமர்ந்தான். நீலன் நகரத்தில் பல கொடுமைகளைச் செய்தான். வீரர் அரசனிடம் கூற, அரசன் சிங்களர் நகரத்தை அழிக்க வந்தனரா என்று கேட்டான். தான் நீலன் துணையுடன் மட்டுமே வந்ததாகக் கூறிய கஜபாகு, நீலனை அழைத்து அரசன் எதிரே நிறுத்தினான். மேலும் அரசனை அச்சுறுத்தி, தந்தையின் காலத்தில் சிறைபிடிக்கப்பட்ட சிங்களர்களுக்கு ஈடாக 12000 தமிழர்களையும், பத்தினி தெய்வத்தின் சிலம்பையும், வட்ட காமினி அரசன் காலத்தில் எடுத்து வந்த புத்தரது புனித பிட்சா பாத்திரத்தையும் கைப்பற்றிச் சென்றான். இது நடக்க முடியாத புராணச் செய்திபோல் உள்ளது.[4] படையெடுப்பினால் அல்லாது இதைச் சாதிக்க முடியாது. படையெடுத்து வெற்றி பெற்றிருந்தால் மகாவம்சம், தீப வம்சம் போன்ற நூல்கள் அதனைப் பெருமிதத்துடன் குறித்திருக்கும். அந்நூல்களில் இந் நிகழ்ச்சியைப் பற்றிய செய்திகளில்லை.

---

3. Kanakasabhai V., The Tamils Eighteen Hundred Years Ago, 1904, PP, 8-9
4. The Rajavaliye, Ec. by. G. Gunasekara, Colombo. 1200, P. 41,

5.2. மகாவம்சம் போன்ற நூல்கள் வங்க நாசிக தீசன் காலத்தில் நடந்த படையெடுப்பைப்பற்றிக் கூறவில்லை. ஆயினும் அப்படையெடுப்பினைப்பற்றி ஆராய்வதன் வாயிலாக சங்ககாலம் பற்றிய ஒரு தடையை விடுவிக்கலாம். இப்படையெடுப்பாளரைத் தமிழகத்திலிருந்து வந்த ஒரு கொள்ளைக் கூட்டத்தினர் என்பார் ம. இராதாகிருஷ்ண பிள்ளை[5] இப்படையெடுப்பைப்பற்றி H. பார்க்கர் என்ற இலங்கை வரலாற்று ஆய்வாளர் நன்கு ஆராய்ந்து கூறியுள்ளார்[6] இவர் இலங்கை வரலாற்று ஆதாரங்கள் கல்வெட்டுகள் போன்றவற்றை ஆய்ந்து தொகுத்தவர் இவரிட முள்ள ஒரு கையேட்டுச்சுவடி நம் ஆய்விற்குப் பயன்படக் கூடியது. இது, கி.பி.1640இல் விமல தர்ம சூரியர் என்ற அரசரின் குமாரரான இளவரசன் விஜயபாலன் மாத்தளை மாவட்ட ஆட்சி யில் தனக்குள்ள ஆட்சியுரிமையை நிலைநாட்ட வெளியிட்ட ஆவணமாகும்.[7] அந்த சுவடியில் வங்க நாசிக தீசன் காலப் படையெடுப்பைப் பற்றி விளக்கமான குறிப்பொன்று உள்ளது. இது படையெடுப்பாளர் மதுரையை ஆண்ட செழியர்களே (Solians of Madura) என்று கூறுகிறது. இப்போர், 'அங்கோட மிஹூவாகே ஹடன-குட்டைக்கொம்பு எருமை மாட்டுக்கான போர்' என்ற பெயரில் குறிப்பிடப்படுகிறது

'வங்க நாசிக தீசன் காலத்தில் (கி. பி. 110-113) மதுரையை ஆண்ட செழியர்களால் இலங்கை மீது நடத்தப்பட்ட படை யெடுப்புக்கான வெளிப்படையான குறிப்பும் இச்சுவடியில் அடங்கி யுள்ளது. அது, தாந்தேனியாவைச் சேர்ந்த சிமீ என்ற விதவை வேடச்சியின் குட்டைக் கொம்பு எருமை மாட்டிற்கான போர் (அங்கோட மிஹூவாகே ஹடன) என்பதாகக் கூறப்படுகிறது. ஆயினும், நற்பேறின்மை காரணமாக இத்தொடருக்கான விளக்கம் இச்சுவடியில் தரப்படவில்லை. இப்போருக்கான காரணம் யாதென்று வரலாற்றுச் செய்திகள் ஏதும் இல்லா திருப்பினும், பலரும் அறிந்த ஒரு நிகழ்ச்சி இலங்கைக்கும் மதுரைக்கும் இடையேயான போருக்குக் காரணமாயிற்று என இது ஐயமின்றிக் குறிப்பிடுகிறது. மதுரையில் இருந்து வந்திருந்த வர்த்தகர்கள் சிலர் விதவையின் எருமைமாட்டைக் கொன்றோ அல்லது கைப்பற்றியோ சென்றனர் என்றும், இதற்காக வேடர்

---

5. இராதாகிருஷ்ணபிள்ளை, மா,. இலங்கையுன் கதை, 1962, பக். 32.
6. Parker.H.. Ancient Ceylon, 1909. London Luza & Co, Publishers To The India OfficT P. 101.
7. Ibid, P. 101.

கள் மேற்கொண்ட பதில் நடவடிக்கை, செழியன் அரசன் தன் மக்களுக்காகப் பழிதீர்க்க அந்நாட்டின் மீது படையெடுக்கத் தூண்டுதலாயிற்று என்றும் நாம் இயைபுப்படுத்தலாம்[8]. போருக்காக ஆநிரைகள் கைப்பற்றப்பட்டனவா, அல்லது இந் நிகழ்ச்சி போருக்குக் காரணமாயிற்றா என்று விளக்கமாகவில்லை. எப்படி இருப்பினும், இப்போர் வங்க நாசிக தீசனுக்கும், மதுரையை ஆண்ட செழியர்களுக்கும் இடையே நடைபெற்றது என்பதே உண்மை.

5: 3: நாம் முன்பே பார்த்தபடி, கி. மு. 258 - 209 அளவில் வாழ்ந்த நெடுஞ்சேரலாதன் காலத்திலோ, அல்லது கொஞ்ச காலம் முன்னரோ வாழ்ந்தவன் கரிகால் சோழன். அவனைப்பற்றி பிற்கால நூல்களிலேயே அவன் இலங்கையை வென்று 12000 சிங்களர்களை இங்கு கொண்டுவந்தான் என்ற செய்தி உள்ளது. 'கரிகாலனைப் பற்றிய இந்நிகழ்ச்சி சங்க இலக்கியங்களில் இல்லை. கரிகாலன் வழிவந்தோர், என்று தங்களைக் கூறிக்கொண்ட இரேனாட்டுச் சோழர்கள் ஆட்சியில் கி. பி. 7 அல்லது 8 ஆம் நூற்றாண்டில் ஆண்ட தெலுங்குச் சோட மன்னனான புண்ணியகுமாரனின் மலப்பாடு பட்டசத்தில் தான் இந்நிகழ்ச்சி முதன்முதலாகக் கூறப்பட்டுள்ளது' என் கிறார் K. A நீலகண்ட சாஸ்திரி[9] அதுபோலவே பிற்கால இலங்கை நூல்களிலேயே இம்மாதிரி சிங்களர் 12000 பேர் சிறைபிடிக்கப்பட்டது. கஜபாகு 12000 தமிழர்களைப் பிடித்தது போன்ற செய்திகள் உள்ளன. சிங்கள புத்தபிக்குகளின் மனப்பான்மையை இது காட்டுகிறது. சோழர்களுக்கும், சிங்கள மன்னர்களுக்கும் இடையே நெடுங்காலமாய் நிலவி வந்த பகைமைப் போட்டிக்குப் பின்னர் தமிழர் செயல்கள் யாவுமே சோழர்கள் செயல்களாகக் கூறுவது அவர்கள் வழக்கமாயிற்று. இதனாலேயே, சோழர்களோ என்று ஐயுறுமாறு இந்நூல் குறிப்புகள் உள்ளன. ஆனால், பார்க்கருடைய கையேட்டுச் சுவடி தீசன் காலப்படை யெடுப்பாளர் மதுரையை ஆண்ட செழியர்களே என்று உறுதிப் படுத்துகிறது.[10]

(தொடரும்)

---

8. H. பார்க்கரின் அதே நூல், பக், 102.

9. Nilakantasastri. K. A., Karikala Chola, The HinduDt. 2. 10. 90.

10. Parker, H., 'The manuscript also Contains a bare reference to the resen of the invasenof Ceylon by the Solians of Madura in the reign of Wankanasika Tiss a (110-118.A.D.,) 102.

வேண்டுகோள்

இலக்கியம் இலக்கணம் சமயம் தத்துவம் வரலாறு கல்வெட்டு கலை பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் வேண்டப் பெறும். கட்டுரைகள் 4-6 பக்க அளவில் அமைதல் நலம். நெடிதாயின் வகைப்படுத்துத் தருதல் வேண்டும். ஒரு பக்கத்தில் தட்டச்சு அல்லது தெளிவான கையெழுத்தில் அமைதல் வேண்டும். ஆசிரியர் குழு தேர்ந்தளிக்கும் கட்டுரைகளே வெளியிடப் பெறும். இன்றியமையாத அடிக்குறிப்புக்களே சேர்க்கப்படும். தேரப்பெறாத கட்டுரைகள் திருப்பி யனுப்பப் பெறா. ஆதலின் கட்டுரைகளைப் படியெடுத்துக் கொண்டு அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

தமிழ்ப் பொழில் ஆசிரியர் குழு

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

யாழ் நூல் — ஆசிரியர் விபுலானந்த அடிகள்	ரூ.	50	00
கட்டுரைப் பொழில் தமிழ்ச்சங்க மணிவிழா மலர்	ரூ.	30	00
கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு)	ரூ.	60	00
இராசராச சோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டுவிழா நினைவு சிறப்பிதழ்	ரூ.	6	00
கபிலர் நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ.	4	00
நக்கீரர் — நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ.	3	00
மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு - பா. வே. மாணிக்க நாயக்கர்	ரூ.	2	00
கவியரசு நினைவு மலர்	ரூ.	1	00
தமிழரசி குறவஞ்சி	ரூ.	0	75

பிற வெளியீடுகள்

கரந்தைக் கோவை [ச. பாலசுந்தரம்]			
கலைக் கூத்தன் கவிதைகள்	ரூ.	4	50

விற்பனைக் கழிவு 20% உண்டு. அஞ்சற் செலவு தனி

தலைவர்
கரந்தைத் தமிழ்ச் சங்கம்
தஞ்சாவூர்-613 002.

Regd. No. TN/TB/24.

நூல்-அஞ்சல்

பெறுநர்

திருமிகு ....

....

....

ஆசிரியர்,
தமிழ்ப்பொழில்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர் - 613 002.

தமிழ்ப் பொழில் கட்டணம்

		உள்நாடு	வெளிநாடு
தனியிதழ்	ரூ.	2 50	3 00
ஆண்டுக் கட்டணம்	ரூ.	30 00	60 00
வாழ் நாள் கட்டணம்	ரூ.	250 00	600 00

வெளியிடுபவர் திரு. ச. இராமநாதன், தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002.
அச்சிடுபவர் திரு. M. சந்திரமௌலி,
ஜெமினி அச்சகம், 1887/1, மேலராசவீதி,
தஞ்சாவூர் - 613 009.